385

நவமணி.

உள் நாடு ரூ 1

வெளி நாடு ரூ $1\frac{1}{2}$

ஆசிரியன் சி.ரா.ம இராமநாதன்

NAVAMANI.

(A High Class Tamil monthly)

PALLATUR, RAMNAD Dt. S. INDIA.

Vol. 2. பிரஜோற்பத்தி-ஸு ஆனி-மீ No 6.

பொருளடக்கம்.

எண்.	விஷயம்.	பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	201
2.	வேண்டுகோள்	202
3.	தீண்டாமை விலக்கு :—பத்திராதிபர்	203
4.	பழக்கம் :—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் எழுதுவது	207
5.	மணியொளி :—பத்திராதிபர்	209
6.	பாரதீய நாட்டியம் :—திரு. லெக்ஷ்மணசங்கரன் அவர்கள் எழுதுவது.	213
7.	மனோரஞ்சிதன் :—வரகவி சவுரிநாதன் அவர்கள் எழுதுவது	218
8.	நரபலி :—திரு. நடராஜ முதலியார் அவர்கள் எழுதுவது	223
9.	பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த பன்னிரு செல்வர்கள் :—பாற்கடலோன் தொகுத்தது	226
10.	கனகவல்லி அல்லது கள்வர்கவர்ந்த கன்னிகை :—கோவை திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதுவது	231
11.	திருப்பத்தூர் தாலூகாக் காங்கிரஸ் சபை	235
12.	மறியல் முறை :—(மஹாத்மா) மோ. க. காந்தி	238

சந்தாதாருக்கு அறிவிப்பு.

வெளிநாட்டில் புதிதாய்ச் சந்தா செலுத்திய யாவருக்கும் பத்திரிகையை அனுப்புகிறோம் எனினும் எவருக்கேனும் பத்திரிகை கிடைக்காமலிருந்தால் அவர்கள் சந்தா செலுத்திப் பெற்றுள்ள நம்பரைக் குறித்துச் சரியான விலாசந் தெரிவித்தால் உடனே பத்திரிகை அனுப்பப்படும். சிலர் ரூபாயைமட்டும் அனுப்பி விலாசம் அறிவிக்காமலிருக்கின்றனர். யாவரும் ரூபாய் அனுப்பும் பொழுதே சரியான விலாசத்துடன் கடிதமொன்றும் எழுதவேண்டுகிறோம்.

கடவுள் வணக்கம்.

தனனதன தாந்த தந்தத்
தனனதன தாந்த தந்தத்
தனனதன தாந்த தந்தத் தனதான.

21 JUL 1931

தகரநறை பூண்ட விந்தைக்
குழலியர்கள் தேய்ந்த இன்பத்
தளருமிடை ஏந்து தங்கத் தனமானார்
தமைமனதில் வாஞ்சை பொங்கக்
கலவியொடு சேர்ந்து மந்த்ரச்
சமயசெப நீங்கி இந்தப் படிநாளும்
புகலரிய தாந்த்ரி சங்கத்
தமிழ்பனுவ லாய்ந்து கொஞ்சிப்
புவியதனில் வாய்ந்து வஞ்சித் துழல்மூடர்
புனிதமிலி மாந்தர் தங்கட்
புகழ்பகர்தல் நீங்கி நின்பொற்
புளகமலர் பூண்டு வந்தித் திடுவேனே
தகுடதகு தாந்த தந்தத்
திகுடதிகு தீந்த திந்தித்
தகுகணக தாங்க ணங்கத் தனதான
தனனதன தாந்த தந்தத்
தெனநடன மார்ந்த துங்கத்
தனிமயிலை ஊர்ந்த சந்தத் திருமார்பா
திகையசுரர் மாண்ட ழுந்தத்
திறலயிலை வாங்கு செங்கைச்
சிமையவரை ஈன்ற மங்கைக் கொருபாலா
திகழ்வயிர மேந்து கொங்கைக்
குறவனிதை சாந்த சந்த்ரச்
சிகரமுகி லோங்கு செந்திற் பெருமாளே.

வேண்டுகோள்.

பள்ளத்தூரில் சீக்கிரமாக அந்நியத்துணி மறியலும் கள்ளுக்கடை மறியலும் துவங்குவதற்காகத் தகுதிவாய்ந்த குடும்பங்களிலிருந்து 36 தொண்டர்கள் சேர்ந்துள்ளதோடு இன்னும் பலபேர் சேர்ந்துகொள்வதாக வாக்குறுதியுங் கொடுத்துள்ளார்கள். அதை ஆதரித்து யாவருந் தகுந்த பொருளுதவி செய்யவேண்டுகிறோம். பொருளுதவிசெய்வோர் 'நவமணி' பத்திரிகாலய மானேஜரிடத்திலும் திரு. டாக்டர் வெங்கிடசேஷன் அவர்களிடத்திலும் கொடுத்துதவுமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். புதிதாய்ச் சேருந்தொண்டர்களும் ஷை இரு இடங்களிலும் பதிவு செய்துகொள்ளலாம். மறியல் ஆரம்பத் தேதி சீக்கிரந் துண்டுப் பிரசுர மூலம் அறிவிக்கப்படும்.

காரியதரிசி

திருப்பத்தூர் தாலுக்காக் காங்கிரஸ் கமிட்டி

பள்ளத்தூர்.

உ

எல்லாம் தெய்வச்செயல்.

‘நவமணி’

பெற்ற தாயும் பிறந்தபொன் னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந் தனவே. [பாரதியார்]
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு. [திருவள்ளுவர்]

மாலை 2. } பள்ளத்தூர், பிரஜோற்பத்தி, ஆனி { மணி 6.

தீண்டாமை விலக்கு.

தேசிய மஹாசபையின் இன்றியமையாத வேலைகளுள் தீண்டாமை விலக்கும் ஒன்றாகும். இது பற்றி ஆண்டுகள் தோறும் சில முக்கிய தீர்மானங்கள் இந்திய தேசீய மஹாசபையிலும் மாகாண மஹாசபைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவைகளை அமுலுக்குக் கொண்டுவரவும் தேசத்தலைவர்கள் பாடுபட்டுள்ளனர். ஆனால், அத்திட்டம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. தேசியத்தொண்டர்கள் யாவரும், தேசப் பற்றுடையவர் யாவரும், உலகியல் உணர்ந்தவர்கள் யாவரும் ஹிந்து மதத்திற்குத் தீண்டாமை பெரிய மாசு என்றும் தேசவிடுதலைக்குத் தீண்டாமை பெரிய முட்டுக்கட்டையென்றும் மனிதசமூகத்திற்கு இச்செயல் பெரிய பழிச்சொல் என்றும் நன்குணர்ந்திருக்கின்றனர். செயலில் இக்கொடிய ஒன்றை அகற்ற யாவரும் துணிந்தாரில்லை. மனிதனை மனிதன் அடிமையாக்கி வாழும் வாழ்க்கை நம்மிலிருந்து விலக

வேண்டுமென அல்லும் பகலும் ஓயாது போராடும் நாம் நமது சகோதர மக்களில் ஆறுகோடி மனிதர்களை அடிமையாக்கி வாழும் வாழ்க்கையை முற்றிலும் ஒழித்தோமில்லை. நமது சுதந்தரங்களில் பிறர் தலையிடுதல் அறவே ஒழியவேண்டுமெனப் பாடு படும் நாம் தீண்டாதார் என ஒதுக்கிவைத்த சகோதரர்களின் உரிமைகளைப் பறித்து வாழ்வதை நீக்கினேமில்லை. தொடுவதற்கும் லாயக்கற்ற மிருகங்கள் கலந்துகொள்ளும், நாம் மனமார அம்மிருகங்களுக்கு அனுமதியளிக்கும் அவ்வளவு தூரங்கூட நமது சகோதரமக்களுக்கு எல்லா உரிமைகளையும் அளிக்கவும் எல்லாப் பொது இடங்களிலும் அனுமதிக்கவும் தயங்கும் மக்கள் பலர் நம் நாட்டிலும் குறிப்பாக நாம் சீர்திருந்தி தேசத்திலே முன்னணிவகிக்க வேண்டுமென்று பாடுபடும் தேசியசபையிலும் இருக்கிறார்கள் என்றால் இது எவ்வளவு வெட்கக்கேடான விஷயம் பாருங்கள்.

நம் தேசியத்தலைவர்கள் பலரிடம் இந்த விஷயமாக நாம் பழகியபொழுது அவர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பாரிடையே நாகரீக உணர்ச்சியும் கல்வியறிவும் வாய்க்கப்பெற்ற ஒரு சிலருடன் கைகுலுக்குதலும் எங்கேனும் சில விருந்துகளில் கலந்துகொள்ளுதலும் தாங்கள் தீண்டாமை விலக்கிற்குச் செய்துள்ள மஹத்தான தியாகமென மகிழ்ந்தார்களே யொழிய, உண்மையில் தாங்கள் அது கண்டு வெட்கப்பட்டாரில்லை. எந்த வகுப்பிலும் படித்தவர்கள் தாங்களே முன்னேற்றமடைவர். சீர்திருத்தஞ் செய்வோர் பிற்போக்காளரிடையே தங்கள் பிரசாரத்தைச் செய்து அவர்களை முன்னணியில் நிறுத்துவதே நல்ல சீர்திருத்தவேலையே யல்லாமல் சீர்திருந்தியவர்களுடன் கூடித்திரிவது சீர்திருத்த வேலைக்குச் சிறந்தமார்க்கமல்ல. நமது தேசிய வீரர்களின் சீர்திருத்தம் பிந்திய வழியிலேயேதான் உள்ளது. தீண்டாதாரை உண்மையில் முன்னுக்குக் கொண்டுவரவேண்டும். தீண்டாமைப்பேய் நம்மிடையிருந்து ஒட்டப்பெறவேண்டும் என்ற நன்னோக்கம் திரிகரண சுத்தியாக ஒவ்வோர் தேசிய வாதியின் மனதிலுமிருக்குமானால் அவன் அதற்கெனச் செய்யவேண்டிய வேலைகள் சில உண்டு. அம்மக்களில் கல்வி, ஒழுக்கம் உலகியல் ஆதியன ஒன்றுமே

தெரியாத தீண்டாதார் என்ற மக்கள் வாழும் சேறிகள் தோறும் உண்மையான பிரசாரகன் தினஞ்சென்று அவர்களுடன் கூடிக் குலாவி அவர்களுக்கு முதலில் உலகியலை உணர்த்துவதுடன் சுகாதார முறைப்படி வாழப் பழக்கவேண்டும். அது கொஞ்சம் சிரமமானவேலையே. சீர்திருத்தப் பாதை கரடுமொரடானபாதையே யல்லாது வழுவழுப்பான பாதையல்ல. இரண்டாவதாக அவர்கள் அறியாத பிராயம் முதலே மக்களை தொழிற்செய்து பிழைப்ப தற்கு அனுப்பிவிடுவதைத் தடுத்து இலவசத் தேசியத் திண்ணைப் பள்ளிகள் ஆங்காங்கு உற்பத்திசெய்து அதில் அக்குழந்தை களுக்குக் கல்வி பயிற்றுவிக்கப்படவேண்டும். கூடுமானால் இராப் பள்ளிகளையும் நிறுவி பகலில் தொழிலுக்குச் சென்ற பெரிய மனி தர்களுக்கும் இரவில் சிலமணிநேரம்கல்விபயிற்றுவிக்கப்படவேண் டும். மூன்றாவதாகஎளிய நடையில் பேசும் ஆற்றல்வாய்ந்த பிர சங்கிகளைக்கொண்டு அச்சேறிகள் தோறும் வாரம் ஒருமுறை யேனும் கூட்டங்கள் கூட்டுவித்து அவர்களிடையே உள்ள தீய பழக்கங்களை விட்டுவிடும்படியும் மக்களாய் மக்களோடு சமமாய் யாவற்றையும் அனுபவிக்கப்பிறந்த அம்மக்கள் தனித்துவாழ வேண்டியதன் கடமையையும் அவர்களும் எல்லாமக்களையும் போன்று மனிதர்களே என்பதையும் அந்த எளிய மக்கள் நன் குணரும்படி செய்யவேண்டும். இது ஒன்றிரண்டு கூட்டங்களில் அறிந்துகொள்ளக்கூடியவிஷயமல்ல. நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் அடிமைவாழ்வு கொண்ட நமக்கு நாற்பத்தைந்து ஆண்டு களாக இடையறாது செய்த தேசியப் பிரசாரம் எங்ஙனம் இன் றளவும் முழுப்பலனையுந் தரவில்லையோ, அதேமாதிரி அவர்களை நோக்கினால் அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய வேலை அளவற்ற தென ஒவ்வோர்வரும் ஒப்புக்கொண்டே தீருவர். அவர்களைப் பல முறை ஓயாது கூட்டுவித்துப் பிரசங்கங்கள் செய்து அக் கூட்டங்களில் தேசிய அன்பர்கள் எவ்வித வித்தியாசமுமில்லாமல் கலந்துகொள்ளவேண்டும். கூடுமானவரை இத்தியாதி கூட்டங் களைச் சேறிகளிலேயே வைத்து உயர்ந்தவர்களென எண்ணப் பட்டோரை எல்லாம் அங்கு அழைக்கப்படவேண்டும். தீண்டா தாரென்ற மக்களிடையே அடிக்கடி கல்விப்பரீக்ஷை, சுகாதாரப் பரீக்ஷை முதலியன வைத்து நன்கு கற்றவர்களுக்கும் சுகாதார

முறையில் வாழ்பவர்களுக்கும் நற்சாக்ஷிபத்திரங்களும் இனு மும் வழங்கவேண்டும். இத்தியாதி முறைகளில் தேசத்தொண் டர்கள் சிலர் இவ்வேலையையே செய்வதற்கு ஒதுக்கப்பட்டு தேசத்தில் குடிவிலக்கு, அந்நியத்துணி விலக்கு முதலிய பிரசாரம் நடைபெறுவதுபோல் தீண்டாமை விலக்குப் பிரசாரமும் மிக முக்கியமாயும் ஆர்வத்தோடும் நடத்தப்படல் வேண்டும். வீணுக ஆண்டுகள் தோறும் கூடும் மஹாநாடுகளில் தீர்மானங்களை மாத் திரஞ் செய்துவைத்துவிடுவதால் தேசியமஹாசபையார் தீண்டா தாருக்குச் சரியான வேலைசெய்தவர்களாகமாட்டார்கள். தேசிய சபை யார் தீர்மானங்களைச் செய்து அதைத் தீண்டாதார் என்ற மக்கள் யாவரும் உணருப்படியான அளவுகூட வேலைசெய்யாத தால் தேசியசபை தீண்டாதாருக்கு என்ன நன்மை செய்கிறது? தேசியசபையில் தீண்டாதார் அங்கம்பெறவேண்டுவது அவசியமா? என்பதை அவர்கள் நன்குணராதிருக்கிறார்கள். தேசியசபை நிகழ்ச்சிகள் யாவும் மிக நன்றாக அவர்களுக்கு உணர்த்தப்பட வேண்டும். தேசியசபை என்றால் என்ன என அறியாதமக்கள் பலர் அவரிடை வாழ்வதுபோய் அவர்களே தேசியசபையில் கலந்து தங்கள் சமூகத்திற்கு இந்தியாவில் தேசியசபையே பிரதி நிதித்துவம் வாய்ந்த சபையென எல்லோருடனும் போராடும்படி அவர்களைத் தூண்டவேண்டும். தேசம் முன்னேற்றமடையவேண்டு மானால் தேசமக்கள் யாவரும் ஒரு நிலைப்பட்டு முன்னேற்ற வேலையில் ஈடுபடவேண்டுது இன்றியமையாததொன்றாகும். எங் ஙனம் 7-கோடி முஸ்லீம் மக்கள் விஷயம் மிக முக்கியமாக ஒத்துப்போக வேண்டுமென்று தேசத்தலைவர்கள் கவலைகொள்ளு கின்றனரோ அங்ஙனமே இவ்வாறு கோடி தீண்டாதார் என் றோரின் விஷயமும் கண்ணுங்கருத்துஞ் செலுத்தி உடனே நிவர்த்திமார்க்கந் தேடவேண்டிய விஷயமே! கிராம, தாலுகா, ஜில்லா, தேசியசபைகளேனும் உடனே முயற்சித்து இத்தீண் டாமை விலக்கில் பெரும் பங்கெடுத்துக்கொண்டு நாம் மேலே கூறிய மூன்றுவித வேலைகளையும் உடனே செய்யவேண்டுகிறோம். தேசவிடுதலைக்குத் தீண்டாமை யொழித்தல்சிறந்த செயலாகும். மக்கள் யாவரும் ஒரேநிலையடைய மக்களாய்ப் பிறந்தோரை பணி செய்யக் கூவி அழைக்கின்றோம். சமரசமக்கள் வீரமுடன் வருக!

பழக்கம்.

டர்பன் சரஸ்வதி சபைத்தலைவர்
திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் எழுதியது.

அந்தோபழக்கமே! உன்னை ஏன் நான் கூப்பிட்டேன். உன்னாலன்றோ நம்முடைய தமிழ்நாடு முன்னேறும் தன்மையற்றிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் உன்னைக் கூப்பிடக் காண்கின்றேனே! பிறநாட்டார் தினேதினே தங்களுடைய நிலையில் உயர்வடைய நம்முடைய தமிழ்நாடு முன்னிருந்த நிலையிலிருந்து பின்னடைய நீயே காரணமென்று உன்னையே பலரும் நிந்தனை செய்கிறார்கள். இதை நீ யுணராயா? உணர்ந்திருந்தால் ஐயோ! நீ ஏன் இன்னும் இந்த அவதூற்றைத் தாங்கித் தமிழர்களைவிட்டு நீங்காதிருக்கிறாய்? பழக்கமென்பது கொடியதோர் பிசாசு, என்று ஒரு மேதாவி கூறியுள்ளதாக எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்படியாயின் உன்னை யோட்டுவதற்கு மந்திரவாதிகள் இருக்க வேண்டும். அத்தகையோர் உன்னை ஓட்டும் வரையிலும் நீ யொழியாய் போலும். ஆயினும் உலகத்திலே நல்லதும் கெட்டதும் உண்டல்லவா? அதுபோல உன்னையும் நல்லதென்று ஒரு சிலர் கூறுகிறார்கள். நல்ல பழக்கம் கொண்டவர்கள் உன்னை மெச்சுகிறார்கள். தீயபழக்கம் கொண்டவர்களும் உன்னைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் பிறர் பிறர் அத்தகையோரை ஏசுகிறார்கள். அ[illegible]ன பொழுது அது உன்னையுஞ் சாருகிறது என்று, பாழாய்ப்போ[illegible]ா? பழக்கமே, உன்னைக் கூறும்போது உன்மனம் நோகவில்லை[illegible]து நொந்திருந்தால் நீ தீயோரைவிட்டு விலகியிருப்பாய் என்ப[illegible]ிழ் திண்ணம். எடுத்ததற்கெல்லாம் உன்னைக் கூப்பிடும் நாடு த[illegible]ன். நாட்டைத் தவிர வேறுநாடு உலகத்திலேயே கிடையாதென்பே[illegible]க்கு "இப்படிச் செய்வானேன்? அப்படிச் செய்தால் நன்றாயிருக்குமே" என்று யாரேனு முரைத்தால், இப்படிச்செய்வது பழ[illegible]றது. ஆகையினால் அப்படிச் செய்யவேண்டாம், என்ற விடைவருகி[illegible]ங்கு, உணவு, நடை, பாவனை, தொழில்முறை, குடும்பவிவாகம், சப

இட்டலி, தோசை, இடக்கரடக்கல், குழூஉக்குறி முதலியன யாவுக்குமா நீ காரணமாயிருக்கவேண்டும்? என்னே! உன் நிலைமை. நீ என்று எங்கள் சமூகத்தைவிட்டு நீங்குவாய்? உன்னைக்கோராமல் இருக்க ஓர் உபாயம் தேடிவிடக்கூடாதா? ஏ! பழக்கமே! எல்லாவிஷயங்களுக்கும் நீ மூலகாரணமன்றென்பதை நானறிவேன். பலரும் அறிவார்கள். அன்றியும் நீ நிந்திக்கப்படுகிறாய். இந்நிந்தனை நீங்க உனக்கு ஓர்வழிகாட்டுகிறேன். அதைப்பற்றினால் இந்த அபவாதத்திலிருந்து நீ தப்பித்துக்கொள்ளமுடியும். என்னிடம் நம்பிக்கைகொண்டால் நி நலமடைவாய். இல்லாவிட்டால் துன்புறுவாய். நான் சொல்வதைக்கேள். யாரேனும் தவறுதலாக நடந்து உன்னைக் காரணகர்த்தாவாக்கினால், அவர்களுடைய கன்னப் பொறியில் கனமாய்த்தாக்கிக் கண்ணியப்படுத்து. உடனே அவர்களுடைய கண்களில் ஒளிமிகும். பிரகாசமுண்டாகும். தங்கள் குற்றத்தை உணர்வார்கள். திருத்தமுண்டாகும். நீயும் அபவாதத்திலிருந்து மீள்வாய்! இந்த என் உபதேசம் ஏற்றதென்பதை நீயறிந்தால் உடனே பின்பற்று. அதிக சீக்கிரத்தில் எடுத்ததற்கெல்லாம் இம்சையுறும் அபாக்கிய நிலையிலிருந்து உய்யும் வகை உனக்கேற்படும். ஐயோ! நீ படும்பாடு உலகில் வேறுயாரே பட்டனர்? உன்னைக்கோரும் விஷயத்தை என்று தமிழர்கள் கைவிடுவார்களோ அன்றே அவர்களும் நன்மை அடைவார்கள். நீயும் அதைக் கண்டு ஆநந்தங்கொள்வாய் பழக்கமே! உன்னிடம் எனக்குச் சிறிதுபயமும் கிடையாது. இருந்தால் உனக்கு இவ்வுபதேசம் செய்ய முன்வந்திருக்கமாட்டேன். உன்னுடைய சகாயத்தைக் கோரியிருந்தால் உன்னைத் தலைப்பெயராகக்கொண்ட இவ்விஷயத்தை யெழுத எனக்கு யோசனை தோன்றியிராது. என்னைத் திருத்தியது நீயே. என்னைத் திருத்தியதுபோல் என் தேசச் சகோதர சகோதரிகளையும் நீ திருத்திவைப்பாயேயானால், உனக்கு எவ்வளவோ புண்ணியம். தருணங்கண்டு திருத்தஞ்செய்.

லாபம்பெற வேண்டுமானால்

‘நவமணி’யில் விளம்பரஞ் செய்யுங்கள்.

மணியொளி.

வைசிராய்ப் பிரசங்கம்.

இப்பொழுதைய வைசிராய் லார்டு வில்லிங்டன் பிரபு முதல் முதலாக சிம்லா செம்ஸ்போர்ட் கிளப்பில் பேசியபேச்சு இந்தியர் அனைவருடைய உள்ளத்தையும் கவர்ச்சிசெய்யுமென நம்புகிறோம். அவர் கூறியுள்ள முறைப்படி பார்க்கின் அவர் இந்தியா சுயராஜ்ய மடைந்து சரியான பிரதிநிதித்துவ சபையின் ஆட்சியில் அது நிர்வகிக்கப்பட்டு அதன்கீழ் தாம்வேலை செய்வதில் பெரிதும் ஆசைப்படுவதாக மிக்க உருக்கமாகக் கூறுகிறார். காந்தி இர்வின் ஒப்பந்தத்தை மனப்பூர்வமாக வரவேற்று அதைச்சாஸ்வதமாகச் செய்யத் தாம் அளவற்ற முயற்சி எடுக்கப்போவதாகத் தம்மையே திடப்படுத்திக் கொள்ளுகிறார். அவ்வொப்பந்தத்தின் காரண கர்த்தரான மஹாத்மாஜீ அவ்வொப்பந்த விஷயமாகத் திருப்தியாக நடந்துக்கொள்வதாக மனப்பூர்வமாக நம்புகிறார். காந்தி இர்வின் ஒப்பந்தம் தாற்காலிகமானதெனச் சிலர்பேசும் வார்த்தைகள்கண்டு வெறுக்கிறார், தமக்கு முன்னிருந்த இர்வின் பிரபுசெய்த ராஜியை சாஸ்வதப்படுத்தி இந்தியாவின் தேவைகளை பூர்த்திசெய்ய முயற்சிப்பதில் தாம் முன்னவர்போல் மிக ஆர்வத்துடன் பேசியுள்ள பேச்சின்படி செயல் செய்வாராயின் இந்திய வைசிராய்களில் உண்மையிலேயே வில்லிங்டன்பிரபு முதல்வராகவும் இந்திய சுயராஜ்ய ஸ்தாபகர்களில் நம் வைசிராய்பிரபு தலையாயவராகவும் விளங்குவார். ஆனால் அது செயலில் எவ்வளவுதூரம் வெற்றிதாப் போகிறதென்பதைக் காத்திருந்து கவனிப்போம்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை.

மேலும் மேலும் பலவகையிலும் முயற்சித்தும் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை காண்ப தரிதாகிவிட்டது. இதற்கப்பால் மௌலானா ஷௌக்கத் அலி அவர்கள் கக்ஷிக்கும் தேசியசபைக்கும் ஒருவிதமான பேச்சும் நடத்தாமல் சுதேச முஸ்லீம் கக்ஷிக்கும் தேசிய சபைக்கும் ஓர் ஒற்றுமைகாண ஏற்பாடு செய்யப்பட்

டுள்ளது. மௌலானு ஷௌகத் அலி கக்ஷியார் தனித்தொகுதி விஷயமாகக் கேட்கும் முடிவில் 5 வருஷம் தனித்தொகுதி வேண்டும் என்பதற்குப் பதிலாக 10 வருஷம் வேண்டுமாயினும் தனித்தொகுதி வைத்துக்கொள்ளுங்கள். 10 வருஷங்களுக்குப் பிறகு கலப்புத் தொகுதியை ஆதரியுங்கள் எனத் தேசீய முஸ்லீம் கக்ஷியார் சொல்லியும் மௌலானு கக்ஷியார் பிடிவாதஞ் செய்து விட்டதன்மேல் அவர்களுக்குள்ளும் ஓர் முடிவும் காணமுடியாமல் போனது பெரிய துக்ககரமான சம்பவமாகும். இப்பொழுது இத்தனித்தொகுதி கலப்புத்தொகுதிப் பிரச்னையில் இப்பெருந் தடைவந்து இவ்வளவு கஷ்டத்திற்குள் ளாக்கிவிட்டது பெரிதும் வருந்துவதற்குரிய தொன்ருகும். ஆனல் இன்னும் மஹாத்மாஜீ மட்டும் நம்பிக்கையை இழந்ததாகத் தெரியவில்லை. ஒற்றுமையை நிலைநாட்ட முடியுமென்றே சொல்லுகின்ருர். இப்பிரச்சினையைச் சிறிதுகாலம் நிறுத்திவிட்டுத் தேசீய முஸ்லீம் கக்ஷியார் ஏனைய சிறுபான்மை வகுப்பார்களுடன் கலந்துகொண்டு தேசீயசபையில் ஓர் முடிவு தாற்காலிகமாகக் காண்பதே இப்பொழுது சாலச்சிறந்த தாக விளங்கும் என எண்ணுகிருேம்.

தஞ்சை ஜில்லா ஆதித்திராவிடர் மஹாநாடு.

இம்மஹாநாடு தஞ்சை ஜில்லாவில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் 4—7—31-ல் மிகச்சிறப்பாகக்கூடி 35 தீர்மனங்களுக்குமேல் செய்யப்பட்டுள்ளன. நமது 'நவமணி'யின் இம்மாதத் தலையங்கத்தில் நாம் குறிப்பிட்டுள்ளபடியே அவர்களும் தங்களது 23வது தீர்மானத்தின் மூலம் தங்கள் குறையை எடுத்துக்கூறிக் காங்கிரஸ் தங்களுக்கு ஒரு வேலையையும் செயலளவில் செய்யவில்லை எனக் கண்டுள்ளார்கள். அத்துடன் அத்தீர்மானத்தின் இறுதியில் கதரைக் கண்டித்துமுள்ளார்கள். இது கதர் விஷயமான உண்மைகள் போதிய அளவு மிகநன்ருக அம்மக்களிடையே பிரசாரஞ் செய்யப் படாததாலும் கதருக்கு விரோதிகளாக விளங்கும் சிலருடைய தூண்டுதலாலும் ஏற்பட்டபாகமாகும். எனவே, அவர்கள் அதுபற்றி நன்கறிந்திருப்பின் அத்தீர்மானத்தின் இறுதியில் அவ்வாசகங்களைச் சேர்திருக்கமாட்டார்கள். அல்லாமல் அவர்களது 18-வது தீர்மானத்தை நாம்கவனிப்போமானல் அவர்களின்

போக்கு எவ்வழியில் திரும்புகிறதென்பது நன்குவிளங்கும். இவை களையெல்லாம் உடனேதேசீயசபையார் கவனித்துத்தீண்டாதாரின் குறைகளை நிவர்த்திப்பதில் தாங்கள் எவ்வளவு பங்கெடுத்துக் கொள்ளமுடியுமோ அவ்வளவு பங்கையும் உடனே எடுத்து வேலை செய்ய வேண்டுவதோடு தேசீயம், கதர்பற்றிய விஷயங்களை மிக நன்ருக அவர்கள் அறியும்படி சேறிகள்தோறும் பிரசாரஞ்செய் யப்பட வேண்டுமென நாம் மிகவற்புறுத்துகிறோம்.

காரைக்குடி மறியல்.

காரைக்குடியில் நடைபெறும் அந்நியத்துணி மறியல் நன்கு பழக்கப்படாத புதிய தொண்டர்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அன்பர் திருகூடசுந்தரம் பிள்ளையவர்களுடைய ஓயாத கண் காணிப்பால் மிகத் திறமையாக நடைபெற்று வருகிறது. மறியல் செய்யப்படும் கடைக்காரர்களில் சிலர் எத்தனையோ வித மான இடைஞ்சல்களைச் செய்தபோதிலும் மறியல் தொண்டர் களைத் தாக்கியபோதிலும் தொண்டர்கள் மிகப் பொறுமையோடு மறியலை நடத்துவது பெரும் விசேடமாகும். எல்லா ஊர்களிலும் நடைபெறுவதுபோ லல்லாமல் கடைகள் திறக்கப்படுங் காலமுதல் மீண்டும் மூடப்படும் காலம்வரை முழுநேரமும் மறியல் நடக்கிற படியால் நம் தமிழ்நாட்டில் ஏனைய விடங்களைவிடக் காரைக்குடி மறியல் மிகுந்த வெற்றிக்கும் புகழுக்கும் காரணமாக விளங்கு கிறது. இன்னும் கூடுமானவரை சாத்வீகத்தைக் கடைப்பிடிக்கு மாறு அம்மறியல் கமிட்டியாரை வேண்டுகிறோம். காரைக்குடி மறியல் விஷயமாகப் போலீசார் நடுநிலைமை வகித்து நடந்து கொள்ளுவதே புத்திசாலித்தனமென எச்சரிக்கிறோம்.

தொழிற்கமிஷன் அறிக்கை.

இந்தியர்நிதியில் பத்தரைலக்ஷ ரூபாய் செலவு செய்து சிபார் சுகளனுப்பிய விட்லிகமிஷன் என்ற தொழிற்கமிஷன் அறிக்கை முழுதும் வெளிவந்துள்ளன. அக்கமிஷன் இதுவரை தோன்றிய கூட்டங்களைப் போன்றதல்லாமல் உண்மையாகவே கூடியவரை சிரமப்பட்டு ஏழை இந்திய மக்களின் குறைகளை உள்ளபடி எடுத் துக்காட்டி யிருப்பது போற்றுதற்குரியதாகும். அது செய்துள்ள

சிபார்சுகள் ஏனைய சுதந்தர நாட்டில்வாழும் தொழிலாளிகள் அனுபவிப்பதுடன் ஒப்பிட்டால் மலைக்கு மடுவுக்குமுள்ள வித்தியாசமுள்ளது. ஆயினும் இக்கமிஷன் மனமுவந்து செய்துள்ள சிபார்சுகளையேனும் உடனே அநுஷ்டானத்திற்செய்யின் கொஞ்சமேனும் தொழிலாளர்கள் சௌகர்யம் பெறுவார்கள். இதைச் செய்யும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் உடனே முயற்சி எடுத்தல் நன்மைபயப்பதாகும்.

செட்டிமார்நாட்டில் தேசியவேலை.

உயர்திரு. பொ. திருகூடசுந்தரம்பிள்ளை அவர்களின் முயற்சியால் எந்நாளையும்விட இந்நாள் செட்டிமார் நாடெங்கணும் தேசீய ஆக்கவேலைகள் மிகச் செவ்வனே நடைபெற்று வருகின்றன. ஆங்காங்கு ஒழுங்கு முறையுடன் தேசீய சபைகள் ஸ்தாபிதஞ் செய்யப்பட்டுள்ளன. அவைகள் மூலம் பிரசாரங்கள் செய்ய ஏற்பாடாகி உள்ளது. சில இடங்களில் நீதியான முறையில் மறியல்செய்யவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன. இவ்வளவு தூரம் செயலில் வேலைசெய்யத் தூண்டிய தலைவர்கள் பல போலிகளின் கணக்கற்ற எதிர்ப்புகளுக்கு மத்தியில் அஞ்சாநெஞ்சுடன் முன்னின்று விடாமுயற்சியுடன் மேலும் மேலும் வேலைசெய்வது வருவது போற்றற்குரியதாகும். காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் பிறகு இச்செட்டிமார்நாடு பெரும் விழிப்படைந்து செய்துவரும் அந்நியத்துணி விலக்குப் பகிஷ்காரம், மதுபானத்தை யொழித்தல் கதரை ஆதரித்தல் முதலிய வேலைகள் பெரும்வெற்றி யடைந்துள்ளன. மேலும் மேலும் மனத்தளர்ச்சியோ, பல போலிப் பிரசாரங்களைக்கண்டு பீதியோ அடையாமல் இப்பொழுது செய்வதுபோலவே தனவணிக வாலிபர்களும் இந்நாட்டில் வாழும் ஏனைய வாலிபர்களும் முன்னின்றுழைப்பார்களேயானால் வெகு சீக்கிரம் இப்பகுதி முன்னணி வகித்துவிடும். அல்லாமலும் இந்நாடே இந்தியாவில் பெரும்பாலும் ஜப்பான், சீனா, அமெரிக்கா முதலிய நாட்டுப்பட்டுகள் இறக்குமதிக்கு ஜவாப்தாரி என்ற சொல்லைக்கேட்டு இந்நாட்டில் காலடி எடுத்துவைத்த அன்று முதலே நம் மஹாத்மாஜீ ஒற்றைவேஷ்டி உடுத்துகிறார் என்பதையும் வாலிபர்களுக்கு ஞாபக மூட்டுகிறோம். இந்நாட்டில் எல்லா மக்களும் அப்பழிச்சொல்லை நீக்கி மீண்டும் மஹாத்மாஜீ இவண் வரும்பொழுது கதர்மயமாகவே விளங்கவேண்டுமென வேண்டுகிறோம்.

பாரதீய நாட்டியம்.

திரு. லக்ஷ்மண சங்கரன் அவர்கள் எழுதியது.

ஜீவ சைதன்யத்தின் பெருக்குக்காரணமாக ஆத்ம ஸங்கீதமானது கூத்தனது சரீரத்தின் எழில்வாய்ந்த சலனத்தின் மூலமாய் வெளிக்காட்டுவதே நாட்டியம். பாரதீய நாட்டியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. சுமார் கி. பி. நான்காவது நூற்றாண்டில் பரத சாஸ்திரமானது பரத ரிஷியால் மிகவும் விரிவாகத் தொகுக்கப்பட்டது. ஆயினும் இந்த பரத சாஸ்திரமே அதற்கு வெகுகாலத்திற்கு முன்னர் இயற்றப்பட்ட நடசூத்திரங்களை ஆதாரமாகக் கொண்டுள்ளதென்றால் நாட்டிய சாஸ்திரத்தின் தொன்மை தெற்றென விளங்கும். பாரத சரித்திரத்தில் மிகவும் பண்டைக் காலத்திலேயே இவ்வரும்பெருங் கலையானது அதன் முப்பெருந் துறைகளாகிய நடனம், நாட்டியம், நிருத்தியம் என்ற மூன்றனுள்ளும் மிகவும் விரிவும் வளர்ச்சியுமடைந்திருந்தன. ஹிந்துக்கள் தங்கள் தேச சரித்திரத்தின் ஆரம்பத்திலேயே இந்தக்கலையின் நுணுக்கங்களைக் கரைகண்டு, அதை சாஸ்திரமாக வகுத்துத் தொகுத்து, நாட்டியமாகிய மஹா நதியின் உபநதிகளாகிய நடனம், நாட்டியம், நிருத்தியம் எனும் மூன்றையும் வரையறுத்து, அவற்றின் ஸங்கமம், உலகத்துக்கெல்லாம் நடனநாயகனான நடராசப்பெருமானது திருவடி நிழலிலேயே என்பதை நன்குகாட்டினர்.

இந்தக் கலையைப்பற்றி முதன்முதலாக ரிக்வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் காலையின் அதிதேவதையாகிய உஷாதேவி ஓர் நடனமாதாக உவமிக்கப்பட்டு வெகு எழில்பொருந்திய

ரிக்குகளால் வர்ணிக்கப்பட்டிருக்கிறாள். இன்னும் இதிஹாஸ புராணங்களிலும் இவ்வரும் பெருங்கலையி னிடத்தும் அதனைப் பயில்வோரிடத்தும் எந்தவிதமான நன்மதிப்பும், அபிமானமு மிருந்தது என்பது தெற்றெனவிளங்குகிறது. கந்தர்வ வேதத்தின் இந்த அங்கமானது மஹா உன்னதமான நிலையிலிருந்து ஜன ஸமூகத்தின் வணக்கத்தை இழுத்துக்கொண்டு வந்தது என்று தெரிகிறது. வால்மீகிராமாயணத்தில் பல இடங்களில் நடனத்தைப் பற்றியும் நடனம் பயில்வோரைப்பற்றியும் சொல்லப்பட்டுளது. பாலகாண்டத்தில் பன்னிரண்டுயோஜனை நீளமும் மூன்றுயோஜனை அகலமுமுள்ள அயோத்திமாநகரின்கண் அரசாண்ட தசரதசக்கர வர்த்தியின் ராச்சியத்தின் ஜனாதிபத்தியத்தின் ஒரு முக்கிய பிரிவு "நாடக ஸங்கம்" என்று கூறப்பட்டுள்ளது. (பால காண்டம் 5, 12;) இதுபோலவே அங்க தேசத்திலும் இந்த நாடகசங்கம் ஜன சமூகத்தின் முக்கிய பிரிவாக இருந்தது. இது பாலகாண்டத்தில் லோமபாதர், ரிஷியசிருங்கர் கதைகளினால் தெரிகிறது. தசரத மஹாராஜன் தான்செய்யும் அசுவமேத யாகத்திற்குக் கணக்கர் களையும், சிற்பிகளையும், நடநர்த்தர்களையு மழைத்து அவர்கள் வந்ததால் தன் சபைக்கொரு கௌரவம் என்றெண்ணுகிறான். (பாலகாண்டம், 9, 17; 10-5; 10-6) ராமருக்கு யுவராஜபட்டாபி ஷேகம் நடக்கும் விழாவைக்கண்டு களிகக்கூடிய அறிஞர் குழாத்தில் இந்தப்பகுதியினர் முக்கிய மானவர்கள். அயோத்தியா காண்டத்தில் இராஜ்யத்தின் கெடுதிகளைப்பற்றி வர்ணிக்கும்போது ராஜ்யத்தின் பொதுநன்மைக்கும் க்ஷேமத்துக்கும் இக்கூட்டத்தார் இன்றியமையாதவர்கள் என்று வால்மீகி கூறுகிறார். லங்கேஸ்வர னான இராவண மஹாராஜன் இரவிற்படுக்கப் போகுமுன் "சதிர்க் கச்சேரி" ஒன்று நடத்திப்பார்ப்பது வழக்கம். (சுந்தர காண்டம். 10-38; 10-41) பரதன் தன் தமையனாகிய ராமன் வனவாஸத் திற்குப் பிறகு, அயோத்திமாநகரில் பிரவேசிக்கும் சமயம் அவ்வம யத்தைக் கொண்டாடும்பொருட்டு ஒருவிழா ஏற்படுத்தி அதற்குக் கணிக சங்கத்தாரை அழைக்கிறான். (யுத்தகாண்டம். 130-3) இன்னும் ராமபிரான் இரவு சயன க்ருஹத்துக்குப் போகுமுன் "நடனம்வல்ல நகைமுகமாதரை" அழைத்து அவர்களது எழில் வாய்ந்த நடனத்தைப்பார்ப்பது வழ்க்கம் என்று தெரிகிறது.

ஸ்ரீராமர் நைமிசாரண்யத்தின்கண் நடத்த எண்ணிய அசுவமேத யாகத்தில் அவருக்கு உதவிசெய்யுமாறு பரதன் அயோத்தியி லிருந்து நடத்திச்சென்ற சேனையில் நடநர்த்தகர்களும் எழில் வாய்ந்த மங்கையரும் நடுநாயகங்களாக விளங்கினர். யாகம்நடந்து கொண்டிருக்கும்போது அரசன் லவகுசர்கள் ஆசியாவின் மகத்தான ஆதிகாவியமாகிய வால்மீகி ராமாயணத்தைப் பாடக்கேட்கு மாறு கூட்டிய சபைக்கு அழைக்கப்பட்ட வித்வத் சமாஜத்தாரில் இந்நடநர்த்தர்கள் முக்கியமாக விளங்கினர். (உத்தர காண்டம். 94-9.)

இன்னும் மஹா பாரதத்திலும், மஹா புராணங்களிலும், உபபுராணங்களிலும், மஹாத்மியங்களிலும், நாடக, காவிய அலங்காரசம்பு இவை சம்பந்தமான சாஹித்யங்களிலும் இந்தக்கலையை பற்றியும் இக்கலை வல்லவர்களைப்பற்றியும் வர்ணனைசெறிந்து கிடக்கிறது. இவற்றிலிருந்து நடநர்த்தகர்கள் அரசனால் நன்கு மதிக்கப்பட்டு நகரவாழ்க்கையின் அங்கங்களான அஷ்டரத்நங்களில் ஒருவர் என்று தெரிகிறது.

நாட்டியம் இந்திய ஜாதீய சரித்திரத்தில் வெகுகாலத்திற்கு முன்னதாகவே பரிபூரண மடைந்துவிட்டது என்பதற்குச் சிற்ப கலையிலும் பல அத்தாக்ஷிகள் கிடைத்திருக்கின்றன. சித்திரப் பாவை இவ்விரண்டு வழியிலும் நம்முன்னோர் தங்களுக்கு நடன சாஸ்திரத்திலிருந்த அபிமானத்தை வெளிக்காட்டியிருக்கின்றனர். மிகவும் பண்டையகாலத்தில் நடனத்தை அவலம்பித்துக் கொண்டிருக்கும் விக்ரஹங்கள் புத்தகயாவிலும், பார்ஹுத்திலும் காணப்படுகின்றன. இதைத்தவிர ஸஞ்சியில் வடக்குத்தோரணத்தின் மேற்பலகையில் மாதர்கள் நடனம் செய்வதைப்போலச் செதுக்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ணா நதிக்கரையில் அமராவதியி லிருக்கும் ஸ்தூபத்தில் 1800 வருடங்களுக்கு முன்நடந்த நடனக் காட்சியொன்று செதுக்கப்பட்டிருக்கிறது. புத்தர் ஒரு மண்டபத்தில் சிங்காதனத்தில் வீற்றிருப்பது போலவும் அவருக்குமுன் மாரனின் புதல்விகள் அவரது தீர்க்க வைராக்கியத்தைத் தம் நடனத்தால் திருப்பமுயலுவது போலவும் செதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றைத்தவிர நம்கோயில்களிலும் வீடுகளிலுமிருக்கும் நடநாயக

ஞன நடராசப்பெருமான், கண்ணபிரான், தேவியிவர்களின் நடனக் கோலத்தைக் காட்டிநிற்கும் சித்திரங்களும் பாவைகளும் மனத்தைக்கவரும் அற்புத அழகும் பெருமையும் வாய்ந்தன. சிவபெருமானது ஸந்தியா நிருத்தியத்தையும், வெறியாட்டாகிய ஊர் தாண்டவத்தையும், ஆனந்த தாண்டவத்தையும் ஊழிகாலத்தில் தேவியாரே சாக்ஷியாக வைத்துக்கொண்டு ஆடிய மஹாதாண்டவத்தையும் விளக்கும் விக்ரகங்களும் கணக்கில. கண்ணபிரான் கோபிகளுடன் கூடியாடிய ராஜலீலையின் ஆனந்தம் சித்திரத்தில் எழிலுறப் பொறிக்கப்பெற்றிருக்கின்றது. கண்ணபிரான் காளிங்கனது தலைமேல் நின்றுகொண்டாடிய நர்த்தனமும் மனதிற் பக்திரஸத்தைப்பெருக்குகிறது. தேவியினது வெறியாட்டுக்களிப்பாகிய மஹா காளியின் நடனத்தின் அழகை அறிஞரே அறிவர். இவ்விக்கிரகங்களெல்லாம் நம்நாட்டுச் சிற்பத்தின் பண்டைப்பெருமைக்கு அழியாத அத்தாக்ஷி.

இன்னும் இவ்வரும்பெரும் கலையின் தமிழ்ப்பிரிவை ஆராய்ந்து நோக்கின் ஆரியப்பிரிவைவிட இன்னும் மிகத்தொன்மை வாய்ந்ததெனத்தெரிகிறது. தமிழ்த்துறையில் நாட்டியம் தனக்கென்றே புதிதான மார்க்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. நாட்டிய சம்பந்தமான வடநூல்களில் சொல்லப்படாததும் தமிழகத்துக்கே உரித்தானதுமான கூத்துவகைகள் சிலதமிழ்நூல்களில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையிலும் கடலாடு காதையிலும் கிறிஸ்துவ சகாப்தத்தின்முன் நூற்றாண்டுகளில் வழக்கத்திலிருந்தசில கூத்துவகைகள் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் இக்கூத்துகளைப்பற்றிய விவரங்களைத் தெளிவாகக் கூறியுள்ளார். தமிழ்நூலார் கூத்தின்குணத்தை அநுசரித்துச் சாந்திக்கூத்து, விநோதக்கூத்து என்று இருபகுதியாகப் பிரித்தனர். இவற்றுள் சாந்திக்கூத்தில் கூத்தன் சாந்தியான மனோநிலையில் ஆத்மாவின் உன்னதமான எழிலை அவயவங்களின் சலனங்கள் மூலமாய் வெளிக்காட்டுவது. விநோதக்கூத்து இவ்வளவு உயர்ந்த நோக்கத்தைக் கொள்ளாமல் பொழுதுபோக்காகவே ஏற்பட்டது. இக்கூத்துவகைகளில் குடைக்கூத்து, குடக்கூத்து, குரவைக்கூத்து

எனும் மூவகைக் கூத்துகளைப்பற்றியும் தமிழ் இலக்கியத்தில் குறிப்புகள் செறிந்திருக்கின்றன. சிலப்பதிகாரத்தில் ஆயர்பாடியில்நடந்த குரவைக்கூத்து வர்ணிக்கப்பட் டிருக்கிறது. குடம், குடை எனும் இவ்விருவகைக் கூத்துகளும் தமிழ்நாட்டுக்குத் தெய்வமாகிய செய்வேளின் வெறியாட்டுக்களில்

குடையொடு துடியிரண்டும்
குமரன தாடலாமே—சூடாமணி.

அறுமுகத்தோ னுடல்குடை துடியாடல்
வேண் முருகனுடல்—சிலப்பதிகாரம்.

கடலாடு காதையில் இக்கூத்துகள் பின்வருமாறு வர்ணிக்கப் பட்டுள்ளன.

படை வீழ்த்தவுணர் பையுளெய்தக்
குடை வீழ்த்தவர்மு னாடியகுடையும்
வாணன் பேரூர்மறுகிடை நடந்து
நீணில மளந்தோ னாடியகுடமும் (52, 55.)

முருகக்கடவுள் கடலிலொளிந்த சூரபன்மாவைக்கொன்ற பின் அலையுடுத்த திரையரங்கத்தின்மீது தனது துடியின்நாதத்திற் கிசைய ஆடினர். இதுகண்டு மற்ற அரக்கர்கள் தங்கள் படைகளை யெறிந்துவிட்டோடவே முருகக்கடவுள் தன்முகத்தைக் குடையால் மறைத்துக்கொண்டு குடைக்கூத்தாடினராம்.

மாக்கடனடுவண் நீர்த்திரை யரங்கத்து நிகர்த்து
முன்னின்ற சூர்த்திரங் கடந்தோ னாடியதுடியும்
(2. 49, 51. கடலாடு காதை.)

சேட னுக் கசண்டா ளரக்கர்குல
மாளவிட்டுக் குண்டேழலைக் கடல்கள்
சேரவற்ற னின்றாடி விற்கரமீ ரறுதோன்மேல்—
திருப்புகழ்.

தமிழ்க்கூத்து நூல்களின் தொன்மையை நோக்கின் மிகவும் பண்டைக் காலத்திலேயே தமிழ் நாகரிகத்தில் இத்துறை அடைந்திருந்த விரிவும் பெருமையும் தெற்றென விளங்குகிறது.

மனோரஞ்சிதன்.

திருசிரபுரம் வரகநகர் வரகவி திருவாளர் சவரிநாதன் எழுதியது.

நீர்வளம், நிலவளம் நிறைந்து, குடிவளம் தழைத்து, கோல் வளம் ஓங்கி, என்னாட்டினும் முன்னாட்டிக்கூறும் சிறப்பினை யுடையது மாதவநாடு. அதில் மனோன்மணியம் என்ற அணி நகர் ஒன்றுண்டு. அதில் மகேந்திர னென்ற மன்னன் மனுநெறி தவறாது செங்கோல் செலுத்திவந்தான். அவனுக்கு ஆத்ம நண்பனான மகிதலனை மாவிந்த நகரத்திற்கு அரசனாக்கி இருவரும் சுகக்ஷேமங்களை ஒன்றாய் அனுபவித்துவந்தார்கள். மகிதலன் தன் இரு குழவிகளாகிய மனோரஞ்சிதனையும், கருணைப்பிரவாகனையும் பால்ய வயதில் விட்டு பரமபதமேகினன். அவன்மனைவியும் மறுமாதத்தில் அவனைப் பின்சென்றனர். எனவே மகேந்திரன் மகிதலனின் தம்பியாகிய சிசுபாலனை அரசனாக்கி, இருபாலர்களுக்கும் போஷகனாக நியமித்தான்.

சில நாட்கள் சென்றன. சிசுபாலன் தானே ராஜ்யத்தை அபகரிக்க எண்ணம் கொண்டான். இயற்கையிலே அவன் துஷ்டன். பஞ்சமாபாதகங்கள் பூரணமாய்நிறையப்பெற்றவன். இவனுக்குகந்த நண்பன் சட்டுவாஜி என்ற ஒருவனிருந்தான். அவனிடம் போக நகரக்கூலிகள்கூட நடுங்குமென்றால் மிகையாகாது. சிசுபாலன் சட்டுவாஜியுடன் வேட்டைக்கு அனுப்புவதுபோல் இருபாலர்களையும் அனுப்பி கொல்லுவித்து, காட்டுமிருகங்கள் கொன்றதாக கதைபரப்பிவிட ஏற்பாடுகள் செய்தான். இதையறியா சிசுபாலனுடைய ஏக குமாரன் மாணிக்கவாசகன் அவர்களுடன் செல்ல எவ்வளவோ முயற்சித்தும் பயன்படவில்லை.

இருண்ட கானகத்தில், ஒன்றுமறியாத இளங்குழவிகள் இருவருக்கும், தங்களையறியாது பயமேற்பட்டது. சட்டுவாஜியை வீட்டிற்கு திரும்பலாமென்று அழைத்தார்கள். ஆனால் அவன்

கடுமையாய் தான் அவர்களைக் கொண்டுவந்த காரியத்தை சொன்னான். பாலர்கள் என்னவேண்டியும் பயனில்லை. கடைசியில் அவர்கள் கடவுளை நம்பி உயிரை இழக்க சம்மதித்து தரையில் படுத்துக்கொண்டார்கள். சட்டுவாஜிவாளை உருவி கையை ஓங்கினான். அவ்வளவுதான் திடீரென்றுவானமிடித்தார்ப்போல் "படீர்" என்று வெடிச்சத்தம் கேட்டது. ஓங்கின வாளுடன் சட்டுவாஜி மரம் போல் தரையில் சாய்ந்தான். துஷ்டனுடையகதி "பிறருக்கு வெட்டிய குழிதனக்கே" என்றவாறு முடிந்தது.

"மானென்று வடிவெடுத்து மாரீசன் போய்மடிந்தான்
மானென்று தேனென்று மொழிபேசி சீதைதனை சிறையிருக்கத்
திருடிச் சென்றோன்
வானென்றும் அரசிழந்தான் தண்டலை யார்சதகத்தின்
மகிமை காணீர்,
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று நினைக்குமிது
சகஜந்தானே."

என்றவாறு முடிந்தது. சட்டுவாஜி திரும்பிவராததைக் கண்ட அரசன் ஆட்களை விட்டுத் தேடுகையில் அவன் பிரேதம் அகப்பட்டது. ஆகையால் பால்யர்களும் இறந்துபட்டார்களென்று சந்தோஷங்கொண்டு தன் தநயனிடம்சொன்னான். இதைக்கேட்ட மாணிக்கவாசகம் அடியுண்டநாகம்போல்சீறி "குலத்தைக்கெடுக்க வந்தக் கோடரிக் காம்பே, யாதுமறியாத என் அண்ணனர் மறிக்கவும், நான் மகிழ்வதும் முறையே? நான் உன் உதிரத்தில்பிறக்க மாபாவியானேனே! எனக்கு நீர்கஷ்டப்பட்டு சம்பாதித்தராஜ்யம் வேண்டாம்" என்று சொல்லி வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.

நடுக் கானகத்தில் விடப்பட்ட பால்யர் எங்கு செல்வதென தயங்க, கருணைப்பிரவாகன் தாகவரட்சியால்தவிக்க, அவனை அங்கு அமர்த்தி, மனோரஞ்சிதன் தீர்த்தம் கொண்டுவர பொய்கைநாடிப் புறப்பட்டான். அவன் சென்ற சிறிதுநேரத்திற்குள் ஒரு வேடுவன் ஓடிவந்து கருணைப்பிரவாகனை தூக்கி நல்ல சர்பத் கொடுத்து களைதீர்த்து, தன்தோள்மேல் தூக்கிக்கொண்டு போயினான். உடனே சென்று மற்ற வாலிபனை தேடியும் காணவில்லை.

நிற்க, தடாகத்தைத் தேடிச்சென்ற மனோரஞ்சிதன் வழி தவறி மனோன்மயம் வந்துசேர்ந்தான். அங்கு அரசர் சேனையில் வாலிபர்களைப் பழக்குவதை யறிந்து தானும் தம்பியை இழந்த சோகத்தினால், உயிரை யுத்தகளத்தில் இறப்பதென்ற தீர்மானத்துடன் சேர்ந்தான். மாணிக்கவாசகனும் மனோன்மணியம் வந்து தன் தந்தை செய்த துரோகத்திற்கு தன் உயிரை தானே பலியாக்க சிந்தை கொண்டு பட்டாளத்தில் சேர்ந்தான். கருணைப் பிரவாகன் வேடுவனிடம் இருந்தான். ஆனால் இவ்வேடுவன் துரோணாச்சாரியார் போன்று ராஜதந்திரங்கள் சகலத்தையும் புகட்டிவந்தான். கருணைப்பிரவாகனுக்கு ஒரு வேடுவனுக்கு இவ்வளவு தெரிவது வெகு பிர்மையாயிருந்தது.

இவ்வாறு பலவருடங்கள் கழிந்தன. நம் பாலியர்களெல்லாம் "செம்மனத்தான், தண்ணளியான், செங்கோலான், மங்கையர் தம்மனத்தை வாங்கும் தடந்தோளான்" என்று அன்னம் நளனை வர்ணித்ததுபோல் ராஜலெக்ஷணங்கள் பொருந்தி விளங்கினர். மனோன்மனியத்தின்மேல் துருக்கர் படையெடுத்து வந்தனர். அரசர்படை முதுகுகாட்டி ஓடியது. அதுசமயம் மனோரஞ்சிதன் தன் குதிரையைப் போர்முனையில்தள்ளி வெகுதைரியமாய் போர் புரிந்தான். அவனருகில் மாணிக்கவாசகன் கோடையிடி மழை போல் சரமாரியாய் அம்புகளைப் பொழிந்துகொண்டிருந்தான். எதிரியின் படைவெருண்டு ஓட ஆரம்பித்தது. கடைசியில் துருக்கி மன்னர் கைதியாக்கப்பட்டார். சமாதானமேற்பட்டு துருக்கி மன்னர் சப்பம் கட்ட ஒப்புக்கொண்டார். போர்க்களத்தில் மனோரஞ்சிதன்மீது ஒரு அம்புவந்தது அதைமனோரஞ்சிதன் கவனிக்கவில்லை. அதைக்கண்ட மாணிக்கவாசகன், மனோரஞ்சிதன் குதிரையை வேறுபக்கம் இழுத்துவிட்டதால் உயிர்தப்பினான். எனவே இருவரும் இணைபிரியா நண்பர்களாகினர்.

மகேந்திரனுக்கு பிள்ளையில்லாததால் தன் உயிரைக் காத்து, தன் அரசைநிலை நிறுத்தின மனோரஞ்சிதனை பட்டம் சூட்டி அரசனாக்கி இம்மண்ணுலகைநீத்து விண்ணுலகேகினான். மனோரஞ்சிதன் மாணிக்கவாசகனை தன் முதல் மந்திரியாக்கினார். சிசு

பாலன் அபகரித்தபட்டத்தைவிட பெரும்பட்டத்தில் மனோரஞ்சிதன் அமர்ந்தானன்றோ? அமலனை நம்பினோர் அற்புதமாய் காப்பாற்றப்படுபவர் என்ற உண்மை இங்கு வெளியாகின்றது. மனோரஞ்சித மகாராஜன் கொலுவிலிருக்கும்போது ஓர் பால்யவேடன் அரசர்சபை அடைந்து தன் அண்ணலை தாணுக்காரர் கொலைக்குற்றம்சாற்றி சிறையில் அடைத்திருப்பதாகவும், அவர் நிரபராதி என்றும், அவரை அழைத்து விசாரிக்கவேண்டுமென்றும் கெஞ்சினான். அரசர்மனம் இளகியது. ஓர்வித பாசம் அவரை யறியாமல் வேடனிடம் சென்றது. உடனே மாணிக்கவாசகன் வேடுவனை யாரென்று வினவினான். இதைக்கேட்ட வாலிபன் தன் சரிதையை சொல்லலானான். சகலமும் நிசப்தமாயிருந்தது. மன்னரும் மிகக் கவனமாய்க் கேட்டிருந்தனர். கடைசியாய் வேடன்.

"மாவிந்த ராஜன் ஈன்றமாபாவி யான், என்
அண்ணல் மனோரஞ்சிதன், ராஜனே, பூபதியே"

என்றான். அரசன் தன்னிருக்கையை விட்டெழுந்து தன் தம்பியை கட்டி ஆலிங்கனம்செய்து கடவுளைத் தோத்தரித்தார்கள். உடனே சிறையிலிருந்த வேடுவன் விலங்குகழட்டி அரசர் சபையில் கொண்டுவரப்பட்டான். அரசர் அவனை ஆசனத்திலமர்த்தி தன் தம்பிக்கு செய்த சகல உதவிகளுக்கும் நன்றி செலுத்தினார். உடனே மனோரஞ்சிதன் அவரைத் தன்னுடன் இருக்கும்படி வேண்டினான். அவர்தான் தேசப்பிரஷ்டனென்றும் தன்னை, மாதவநாட்டில் கண்டால் தூக்கிலிட்டுவிடுவாரென்றும், சொன்னார். உடனே அவரைப்பற்றிய பழயகடிதங்கள் கொண்டுவரப்பட்டன. அதற்குமுன்னமேயே மனோரஞ்சிதன் அதை ரத்துசெய்துவிட்டார். அதில் ஓர் ரகசியம் வெளியாயிற்று. மனோரஞ்சிதன் தாய்மாமனாகிய சம்மந்தப்பிரபு மீது ராஜதுரோக குற்றம் சிசுபாலனால் சாற்றப்பட்டு அரசகுடும்பத்தின் பெருமைக்காக தூக்கிலிடாமல், தேசப்பிரஷ்டனாக்கியிருந்தது. மூவரும் கட்டி ஆனந்தித்தார்கள். மந்திரியின் முகம் சிவந்தது. "அரசே, அந்த சிசுபாலனை நாம் உடனே அழைத்து சிக்ஷைசெய்வோம்" என்றார். மனோரஞ்சிதன் மறுத்து "அவர்தன் தநயனுக்காகத் தான் இவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார். ஆகையால் அவனுக்கே

நாம் அந்த ராஜ்யத்தை கொடுப்போம்" என்றூர். இதைக்கேட்ட இரண்டாம் மந்திரி, மாணிக்கவாசகன் தந்தையைவிட்டு ஓடிவிட்டதையும், எங்கே தேடியும் கிடைக்கவில்லை யென்றும் குறிப்பிட்டார். இதைக் கவனித்து மாணிக்கவாசகர் கண்களில் நீர் ததும்பியது. தான் வெளியில் சென்றுவர உத்தாரம் கேட்டார். சம்மந்தப்பிரபு அவரை மறித்து, "மந்திரி, உமக்கு மாணிக்கவாசகனின் சங்கதி தெரியும்போல் தோன்றுகிறது. கடவுள் சாக்ஷியாய் அவரைப்பற்றித் தெரிந்ததை சொல்லும்" என்று ஆக்ஞாபித்தார். தன்சரிதையை மிகவருத்தத்துடன் சொல்லி முடிப்பதற்குள் அரசர் அவரை ஆலிங்கனம்செய்து உச்சிமோந்து உள்ளம்பூரித்தார். பிரிந்தவர் கூடினுல் பேசவும் வேண்டுமோ? அளவிறந்த சந்தோஷம் ஆளைக் கொல்லுவதில்லை என்பார்கள். இல்லையேல் அன்று ஏற்பட்ட சந்தோஷத்தில் சம்பந்தப்பிரபு இவ்வுலகத்தை மறந்திருக்க வேண்டும். அச்சமயத்தில் வாயிற்காப்போன் ஓடிவந்து, சிசுபாலன் கப்பம்செலுத்த வந்திருப்பதாகவும், சமுகம் உத்திரவாக வேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் சொன்னுன். உடனே எல்லோரும் ஆசனத்தை விட்டிறங்கி அவனிடம்சென்று அவனை அழைத்துவந்து ஆசனமீதமர்த்தினுர்கள். தனக்கு என்றுமில்லாத உபசாரனை நடப்பதைக்கண்ட சிசுபாலன் கலக்கத்திற்குள்ளானுன். முதலில் சம்பந்தப்பிரபு பேசத்தொடங்கி அவனை விளித்து தான்யாரென்றும், அங்குள்ள வாலிபன் யாரென்றும், அரசர், மந்திரியாரென்றும் எடுத்துரைத்தார். சிசுபாலன் மனதில் மனஸ்தாபம் குடிகொண்டது. தன்பிழையை க்ஷமிக்குமாறு வேண்டினுன். அவன்செய்த தீமையால் நன்மை விளைந்ததைக் குறிப்பிட்டு எல்லோரும் ஒன்றுகூடி கடவுளை ஸ்தோத்தரித்தார்கள். பின்னர் கருணைப்பிரவாக ராஜனுக்கும், மாணிக்கவாசக ராஜனுக்கும் முடிசூட்டுவைபவம் நடந்தது. இதுவன்ரே சகோதரவாஞ்சை!

"கடவுளை நம்பினோர் கைவிடப்படாரே என்றும்
கடவுளை நம்பினோர்க்குக் கருதியோர் தீமைசெய்யின்
கடவுளே அவர்பால்நின்று காப்பரே இன்னும்மேலாய்
கடவுளத் தீயர்தம்மை கருதிதண் டிப்பாரன்றே!"

நரபலி

அல்லது

தாயின் கருணை.

பழனி திரு. நடராஜமுதலியார் அவர்கள் எழுதுவது.

இவ்விஷயமாக ஆங்கிலக் கவியில் 'கரோடி' என்னும் பட்டம் பெற்ற "ஆல்ப் ரெட்லார்டு டென்னிஸன்" என்பவரால் இயற்றப் பட்ட ஆங்கிலப்பாடலில் அடியில் வரும் கதை காணப்படுகிறது. அதன் தமிழ்மொழி பெயர்ப்பாவது:—

"ஒருகாலத்தில் இங்கிலாந்துப் பிரதேசம், 'பிளேக்' என்னும் கொடிய நோயாலும், பயங்கரமான பஞ்சத்தாலும் குடிமக்கள் பலர் மடியவும், பட்டினம் பண்ணைகளெல்லாம் திடீரெனத் தீவாய்ப்படவும் பள்ளமேடெல்லாம் பிணக்காடாகவும் நேர்ந்ததைக் கண்டு வருந்திய மக்கள் ஒன்றுகூடி மாரியம்மையை வேண்டிப் பிரார்த்தித்தனர். அப்பொழுது ஆலயபூசாரி கோயினுட் சென்று தேவிமுன் நின்று "எமது பற்றுனுலும், பரிஜனமானுலும், பாராமலே ஓர் நரனைப் பலியாகக் கொடுப்போம், இக் கொள்ளை நோயை நீக்கிக் காத்தருள்க." என வேண்டினன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன்மீது ஆவேசம் தோன்றி, 'அரசன் தனது மனைவிமக்கள்மேல் மகிழ்ந்துளான், அவனை தருமையறிந்தெடுத்த ஓர் உயிரை எமக்கு அர்ப்பிதம்செய்க" என்று வாக்குப் பிறந்தது. அதன்பின் காடுமேடெல்லாம் பூசாரி தேடித் திரிந்தான். அரசன் ஆரண்யத்தில் வேட்டையாடிக் கொண்டிருந்தான்; அவன் தேவி அரண்மனையின் அந்தப்புரத்தில் வீற்றிருந்தாள்; அவளும் தனது ஆருயிர்ப் புதல்வனை ஆகந்தழுவி உச்சிமோந்தாள். ஏழாண்டும் முற்றப்பெறாத அப்பச்சிளம்பாலன் அழகொழுகும் தங்கமேனியும், தலைமுடியுமாக பூசாரியின் ஆணைக் கிணங்கி நின்றான்; அவ்விளமகனைப் பூசாரி பார்த்துப் பூரித்து தெய்வசங்கற்பம் ஈதாகப் பாலனைப் பலிசெயக் கொண்டான்;

அரசன் வேட்டையினின்றும் வீடு திரும்பினன். அவனது மனைவி நிகழ்ந்த செய்தியை விளங்கச் சொல்லி நமது பாலனை நாளைப் பலியிடுவர். ஆயின், உமக்கு எம்மிருவருள் யாரிடத்து மேலான அன்பு, உண்மையை ஒளியாது கூறவேண்டும்'' எனவேண்டினுன். அதுகேட்ட அரசன் சிரங்குனிந்து இருகைகட்டித் தோள்கள் முழந்தாளை முட்டத் தாழ்ந்திருந்து "என்பொருட்டுப் பூசாரியும் யோசித்திருப்பான்; தெய்வமும் நன்காய்ந்திருக்கும்'' என பயபக்தியுடன் நாநடுங்க, "ஆயினும், நம்மிருவருள் எனக் கருமையர் யாவரென நான் எவ்வாறு சொல்லமாட்டுவேன்'' என்ருன். பூசாரியும் பூசனை முடித்துப் பலியை நிறுத்திக் கத்தியை ஓங்கினன். அப்பொழுது "அரசன் பத்தினியாள்தான் அன்புக்குறித் தானவள். என்னை— என் கண்மணியை அல்ல! என்று கூவி, அரசன் தடுக்கவும் நில்லாளாகிப் பலிக்கல்மீது தாவிக்குதித்துக் கத்திக் கிரையானுள். பூசாரியும் மகிழ்ந்து "ஆப்தமும் அன்பும் வாய்ந்த ஆருயிரைத் தந்துளோம்; அது தெய்வ சம்மதத்தால் ஏற்கப்பட்ட அரசனது அருமைத்தேவியின் நல்லுயிர். தேவி பலியேற்று இன்னருள்பாலிக்க'' என்று இறைஞ்சினுன் என்பதாம்.

மேற்காட்டிய ஆங்கிலப் புலவர் தாயின் கருணை என்னுது 'நரபலி' எனத் தலைக்குறிப்பிட்டமையால்,

"அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்''

என்றபடி அனைவரது அன்பு விளங்கவும் அதனுள் தாய்கருணை தலைப்படவும் கருதினர்போலும்.

"தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையால் வரும்''

என்பதற்கு ஏற்ப, அரசனது அன்பிற்குறியவன் மகனே என்பது பூசாரியின் செய்கையாற் புலப்படினும், "அவன்பொருட்டுத் தன்னைக் காக்கவே—இவ்வுலகிப்படி நின்றதே'' என்னும் உப

நிஷத் பொருளானது 'மஞ்சள் கொள்வது மூத்தாள் பொருட்டா?' என்னும் பழமொழிக்கிணங்க, அரசன் தடுப்பாலே வெளிப்படும். "மூத்தாள் பிள்ளை" என்றாலே யோசிக்கத்தக்கதென்பது யாவர்க்கும் அநுபவசித்தமாவது அறியப்படும். 'மக்கள் சுவீகாரம்' தவிர்த்து 'மனையாள் சுவீகாரம்' என்பது மநுஸ்மிருதியிலும் இல்லை. அநுஷ்டானத்திலும் காணக்கிடையாது. காதலியின்றிக் காதலன் இல்லையென்பதும் திண்ணம். ஆகவே 'பிரியை' பிரியன் என்பனதாம் பத்யப் பெயர்ப்பின என்று பொருள்செய்திருக்கின்றனர் போலும்.

"மாத்ருதேவோபவ" "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது தாயினைத் தலைமைப் படுத்துதற்குரிய முதுமொழியாகும். 'அடுத்தது' 'அருமையது' என்னும் சொற்கள் பொருள் நிறைவுள்ளன. அடுத்தது மகவெனவும், அருமையது மனையெனவும் ஐதிகபத்திமையும் விளக்கியிருக்கின்றனர். உலகில் தாயில்லாப் பிள்ளை என்றாலே சோகக்குளிப்பாம். ரக்ஷைக்குரித்தாம் என்னும் பாகுபாட்டையும் போற்றியுள்ளார்.

குடிகளின் க்ஷேமலாபங்களைக் கருதாமல் தன்மன நலத்தையே கருதியிருக்கும் அரசனுக்குத் தெய்வ சங்கற்பத்தால் நேரிடக்கூடிய ஆபத்தையும், "அந்யதா சிந்திதம் கார்யம்—தெய்வமந்யத்ர சிந்தையேத்" (தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்) எனும் வாக்கிய வைபவத்தையும், வினை நலத்தின் தூய்மையையும் பூசாரியின் சூழ்ச்சியாலும், தாய்க்கருணையாலு முறையே நன்கு விளக்கியுள்ளார்.

தமிழ்நாடு, பர்மா, சிலோன், மலேயா, சுமத்திரா, டர்பன், செய்கோன் முதலிய இடங்களில் 5000 சந்தாதாரர்களையுடைய 'நவமணிக்கு' நீங்கள் விளம்பரங் கொடுக்கவில்லையா?
வியாபாரிகள் உடனே விளம்பரம் அனுப்பிப் பயன்பெறுதல்நலம்.

பைந்தமிழுக்குத் தொண்டுபுரிந்த பன்னிருசெல்வர்கள்

குமுணன் தலைகொடுத்தவரலாறு

பார்கடலோன் தொகுத்தது.

குமுணன் என்னும் குறுநிலமன்னன் முதல் எழுவள்ளல்களில் ஒருவனுவன். இவன் பாடும் புலவர்கட்கும், இன் முகங்காட்டி இரப்போர்க்கும், பொன்னும், பொருளும் பொன்பட்டாடையும், யானையும் வரையாதளித்து அதனால் 'வள்ளல்' என்று வான்புகழ்கொண்டான். இவன் பிறப்பகம் 'கோங்கு நாடு' என்று மண்டல சதகங் கூறுகின்றது. அச்சதகப் பாடல்:—

"நாட்டினைத் தம்பிகொளக் காடுசென்று நலிவுறுநாள்
பாட்டிசைத் தோர்புலவன் வேண்ட என்தலை பற்றியறுத்
தீட்டியென் தம்பியிடத்தீயிற் கோடிபொன் எய்துமென்று
வாட்டடங் கைத்தருமக்குமணன் கொங்குமண்டலமே" (41)

(கொங்குமண்டல சதகம்)

என்பது இக் கொங்கு நாட்டில் கோயமுத்தூர் ஜில்லாவில் உடுமலைப்பேட்டைத் தாலூகாவிலுள்ள 'கொழுமம்' என்ற பெயருடைய சிறூரே இவனது பிறப்பகம் என்ப. இவ்வூர் முற்காலத்தில் 'குழுணநகர்' என்ற பெயரைக் கொண்டிருந்த தென்று கூறுகின்றனர். இவனது மலைக்கு 'முதிரம்' என்பது பெயர். இப்போது இதனைக் 'குதிரைமலை' யென்றே சொல்லுகின்றனர். இதுபோலவே ஆற்றுக்கும் 'குதிரைஆறு' என்றே கூறுகின்றனர்.

இங்ஙனம் வான்புகழ்கொண்ட வள்ளல் குமுணன் வரையாதளிக்கும் வள்ளன்மை வையகத்தோரை இன்புறுத்தியதால் அவர்கள் இவனை வாயாரப்பாடியும் வாழ்த்தியும் வந்தார்கள். இவற்றால் இவனது வயங்கு புகழ் மேலும் பெருகுவதாயிற்று. இதுகேட்டுப் பொறாத குமுணனது சகோதரன் இளங் குமணன் பொறாமை கொண்டு தமையனது அரசுரிமையைச் சூழ்ச்சியாற் கவர்ந்து அவனைக் காட்டில் துரத்தியதோடமையாது அவனது சிரத்தைக் கொய்து தன்முன் கொணர்

வாருக்குக் கோடி செம்பொன், கொடுப்பதாகப் பறையும் அறைவித்தான்.

இதன் பின் வறுமை நோயால் பெரிதும் நலிவுற்ற 'பெருந்தலைச் சாத்தன்' என்னும் பெயரிய பெரும்புலவர் குமுணனது அருங் கொடைப் பெருமையைக் கேள்வியானுணர்ந்து அவ்வள்ளலைப் பாடித் தமது தரித்திரத்தை நிவர்த்தித்துக்கொள்ள குமுணநகர் சார்ந்தனர். குமுணன் தம்பியால் நாடு கொளப்பட்டு காட்டில் தனித்துறைகின்றான். என்று கூறக்கேட்டுத் தமிழறிவும் தண்ணளியுஞ் சிறந்த அவ் வள்ளலைத் தேடிக்கண்டு அவனது திருவுள்ளங் கனிந்துருகுமாறு தமது வறுமை நிலையைச் செந்தமிழாற் சித்தரித்தும் திருச்செவி கேட்கத் தமது திருந்திய நாவால் :—

"ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழவாப்
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந் திசினே நற்போர்க் குமண
என்னிலை யறிந்தனை யாயி னிந்நிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலெ னடுக்கிய
பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின் வயிரியர்
இன்மை தீர்க்குங் குடிப்பிறந்தோயே."–(புறநானூறு 164)

என "அகவற்பா" ஒன்றினைப்பாடி மேலும் "வெண்பா" ஒன்றும் பாடினர். அது :—

"ஆறுபெருக் கில்லா தருந்திடர்தான் பட்டாலும்
ஊறலமை யாதோ வுலகாற்றத்—தேற
வறியையே யானலு மென்வறுமை தீர்க்கச்
சிறியையோ சீர்க்குமணா செப்பு" (13)

(தமிழ்நாவலர் கதை)

என்பது. இச் செய்யுட்களின் இனிய பொருளும், சுவையும் அமைப்பும் மிகு அழகாகப் பொருந்தி அதிசயத்தை விளைவித்தால்

வள்ளல் உள்ள நெகிழ்ந்தனனேனும், உடனுகப் பொருளீந்து புலவரைக் களிப்பிக்கக்கூடாமைக்கு மெத்த வருந்தினன். தமது வறுமை நிலைமையை இத்துணை தெளிவாகத் தமிழ்புனைந்து பாடி யாசித்த தமிழ்வல்லாருக்கு இல்லை யென்று நான் எவ்வாறு இயம்புவேன்? வள்ளல் என்போர் இல்லை யென்ற சொல்லை அறியாதவராயிற்றே என்று ஏங்கி, முடிவில் தனது மனதில் தோன்றிய புதிய நினைவிற்கு மகிழ்ந்து புலவரை நோக்கி அருந்தமிழ் வல்லீர், எனது உடன்பிறந்தான் என்பாற்கொண்டுள்ள அன்பு அளவிடற்கரியது. எனது சிரத்தை வாளால் கொய்துகொண்டு கொடுப்பார்க்கு அவன் கோடி செம்பொன் வெகுமதி கொடுப்பதாகக் கூறியிருப்பதே அதனை மெய்ப்பிக்கக்கூடியதாம். இதோ! யான்தரும் எனது உடைவாளைப் பெற்று அதனுல் எனது சிரத்தைக் கொய்து எடுத்துச் சென்று அவன் பாற்றந்து தருங்கொடையால் உமது வருமை என்னும் வன்பிணியைத் தீர்த்துக்கொள்ளுதிர் எனப் புகன்று தனது உடைவாளைப் புலவர் கரத்திற்கொடுத்தான். இச்சம்பவம் உண்மையென்பது அடியில் வரும் செய்யுட்களால் உறுதிப்படுகின்றன. அவை:—

கலிவிருத்தம்.

"வெம்புங்காலை வெதும்பி விழுஞ்சிரஞ்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர்நாடு உலகினுந் தேடினும்
எம்பிபோலெனக் கியாரினி நல்லரே."

ஆசிரியப்பா.

"அந்தநாள் வந்திலை யருந்தமிழ்ப் புலவோ
யிந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே."

என்பன.

வள்ளல் ஈந்த ஒள்ளியவாளைத் தம்கையேற்ற புலவர் சிறிதுநேரம் பலவாறு சிந்தித்து இறுதியில் குமணனை நோக்கி, 'உயிர்க்கொடை அளித்த உத்தமா! உனது இத்தகைய அரியசெயலை நாம் எவ்வாறு புகழ்வேம்? அங்ஙனம் புகழினும் அப்புகழ் மொழிபொருந்துவதாமா? உனது அருங்கொடைக்குமுன் மற்றைய கொடை கதிரவன்முன் மின்மினியே ஆம்' என்று வாயாரப்புகழ்ந்து பாராட்டி 'அரசே! நாம்

நாட்டிலுள்ள இளங் குமணன்பாற்சென்று மீண்டு வருமளவும் தாங்கள் இங்கேயே இருத்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.' அரசனும் அவ்வாறே யாகுகவென மொழிந்தான். பின், பெருந்தலைச்சாத்தனார் அங்குனின்றும் நீங்கி 'மாந்தை' யென்னும் சிற்றூரில் பதுமைசெய்வதால் கைதேர்ந்த சிற்பியொருவனை யடுத்துத் தமது கருத்தையறிவித்துக் குமணனைப்போல் பொய்த்தலையொன்று புதுக்குவித்துக் கொண்டு அதனைத் தமது கையகத்தேந்தி இளங்குமணன் அரசுபுரியும் அரண்மனை யடைந்து காவலாள் அநுமதிபெற்று உள்ளேசென்று குருதிவடியும் குமணனது தலையை அவன் திருமுன்னேவைத்து பிரபுவே! தாம்பறை சாற்றியவாறு பொன்னைப் பரிசளித்தல் வேண்டுமென்று கேட்டார்.

இளவல் மூத்தோனின் குருதிச்சிரங்கண்டு உளந்திடுக்கிட்டுத் துக்கம்மேலிட மனதுருகிச் சோகத்திலாழ்ந்தி கண்ணீர் சொரிந்தனன். அந்தோ அண்ணால்! என்று வாய்விட்டும் புலப்பினன். நெஞ்சங் குமரி நிலைதடுமாறிச் சோர்ந்தனன். அவனது துக்கநிலையைத்தெள்ளிதின் உணர்ந்த புலவர், அவனைத்தேற்றித் தம்வசம் செய்தற்பொருட்டு அரசே! வருந்தாதீர்! உமது அளப்பரிய வருத்தத்தை அரிதில் அகற்ற வல்ல அருமருந்தொன் றெம்பாலுண்டு. அது 'அங்கதம்' எனப்படும் செய்யுளாகும். அச்செய்யுள் ஒருவனைச் சாகவும், வாழவும் செய்ய வல்லது. அப்பாட்டினைப்பாடும் சக்தி யெமக்குண்டு. 'நிறைமொழி மாந்தராணை நிலத்தில் மறைமொழி காட்டிவிடும்.' என்பது நீர் கேட்டிலீரோ என்றனர். அதுகேட்ட இளங்குமணன் ஒருவாறு தைரியங் கொண்டு 'புலவீர்! நீர்மொழிந்தவாறு முடிப்பின் பன்மடங்கு பரிசளிக்கத்தவறேன் விரைந்து அப்பணியை மேற்கொள்மின்' என்று வேண்டினன். புலவரும் அவ்வாறே மேற்கொள்வதாகக்கூறி, சற்றுவெளியிற் சென்று அப்பொய்த்தலையை ஓரிடத்தில் மறைத்து வைத்துவிட்டு இளங்குமணனை நோக்கி,

"மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வ
ரின்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுத
லாடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடி னல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றன னாகக் கொன்னே

பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
னாடிழந் ததனினு நனியின் னாதென
வாடந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையி
னாடுமலி யுவகை யொடு வருவ
லோடாப் பூட்கைநின் கிழமையோற் கண்டே."

என்ற இனிய பாடலைப்பாடி அவனது நெஞ்சத்தை நெகழ்வித்து அவனையும், அரண்மனையிலுள்ள தக்காரையும், நகரமக்களில் சிலரையும் புலவர் உடனழைத்துக்கொண்டு குமுணவள்ளல் தனித்துறையும் காடு சேர்ந்து அவ்வள்ளியோனைக்காட்டி இளங்குமுணனைப் பிழைபொறுத் தருளுமாறு வேண்டச்செய்து அவனை நாட்டுக் கெழுந்தருளிவித்து பண்டுபோல் அரியாசனத்திருத்தி அரசுபுரியுமாறு செய்தனர். பின்னர் இளங்குமுணன் புலவர்க்குப் புகன்றவாறு பொன்னும் பொருளும் பொன்பட்டாடையும் போதுமானபடி அளித்துப் போகவிடுத்தான்.

என்னே! அக்காலத்தில் தமிழுக்கும் தமிழ் கற்றூர்க்கும் இருந்த பெருமையும் மதிப்பும்!

'இந்திய மித்திரன்.'

விளம்பரஞ் செய்வோர்க்கொரு விசேஷச்செய்தி.

இந்தியர்களின் குடியேற்ற நாடாகிய மலாயாவில் "இந்திய மித்திரன்" என்னும் பெயருடன் பிரதி புதன்கிழமை தோறும் இரண்டாயிரத்தி ஐநூற்றி லதிகம் பிரதிகளாக வெளியாவதும், முழு மலாயாவின் எல்லாப் பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, பர்மா, சிலோன், சயாம், ஜாவா, சுமத்ரா முதலிய வெளிநாடுகளிலும் விசேஷமாகப் பரவியுள்ளதும் மலாயாவிலிதற் கிணையில்லை யெனக் கொண்டாடும் கீர்த்திவாய்ந்ததுமாகிய சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் விளம்பரஞ் செய்வோரே தமது வியாபார விருத்தியை உண்மையிற் கோருவோர்களும், உத்தேச பலனைப் பூரணமாயடையத் தக்கோருமாவார்கள். சந்தாதார்களாகச் சேருவோர்க்கும் சிந்தைகளிக்கத்தக்க செய்திகளனந்த முண்டு. வெளியூர் வருடசந்தா ரூபாய் 7—8—0 விளம்பர விகிதங்களுக்குக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதவும்.

மானேஜர், "இந்திய மித்திரன்."
ஈப்போ. (எப். எம். எஸ்.)

கனகவல்லி
அல்லது
கள்வர்கவர்ந்த கன்னிகை.

கோவை. திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்
அவர்கள் எழுதியது.

(144-ம் பக்கத் தொடர்ச்சி.)

பத்தாம் அத்தியாயம்.

நல்லாரைக் காண்பதுவு நன்று நலமிக்க
நல்லார் சோற்கேட்பதுவு நன்று—நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்று அவரோ
டிணங்கி யிருப்பதுவு நன்று.—(மூதுரை.)

ஆந்திர ரத்னங்கள் வரலாறு.

இராம ராஜாவால் கூறப்பட்ட கதையை ஜகன்னாத தாஸரும் வீட்டதிகாரியும், மற்றும் அங்கு கூடியிருந்த கதாப்பிரியர்களும் மிகுந்த சிரத்தையுடன் சிரவணித்தனரேனும் "நல்ல கதை நீள மில்லை" என்பதுபோல சீக்கிரம் முடிந்துவிட்டதற்குப் பெரிதும் வருந்தினார்கள். தன்னைப்போலவே பிறருக்கும் விரைவில் கதை முடிந்ததுபற்றி விசாரமாயிருப்பதை யுணர்ந்த வீட்டெஜமானன் இராம ராஜாவைப்பார்த்துப் பிரபுவே! எனது சிறுவிண்ணப்பத் திற்குச் செவிசாய்த்தருளுங்கள். அம்மனுவாவது:—சமைப்பதில் சாமர்த்திய முடையவர்கள் பசும்புல்லையும் ருசியுடைய பதார்த்த மாகச் செய்வதுபோல சாரமற்ற கதையாயினும், சுவைபொருந்திச் சிறக்குமாறு செய்யும் ஆற்றல் தங்களுக் கமைந்திருக்கிறது. ஆனதால், மற்றுமொரு கதையும் தங்கள் வாக்கிலிருந்தே சிரவணிக்க விரும்புகின்றோம். இப்போது அகாலமாய் விடவில்லை.

கதைகூறி முடிப்பதற்குப் போதுமான பொழுதிருக்கிறது. அன்பு கூர்ந்து நீளமானதொரு கதையைக்கூறி எங்களைக் களிப்பிக்க வேண்டுமென்பதே!

வழிப்பிரயாணத்தால் தங்களுக்கு மிகச்சிரமமா யிருக்கும் பட்சத்தில் தாங்கள் இப்பொழுதேசென்று சயனித்துக் கொள்ள லாம். நாளை எழுந்து எனது வீட்டில் என்னோடிருந்து என்னால் அளிக்கப்படும் விருந்தையுண்டு இரவு தங்கள் கதாமிருத தாரையை எங்களது செவிகளிற்பெய்து இன்பமூட்டும்படி பிரார்த்திக்கின் றேன். அவசர காரியத்தை முன்னிட்டு நாளை இங்கு தங்கச் சாவகாசமில்லா திருக்குமானால் இன்றிரவே எங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான். இவ்வகை யில் இவனேன் இவ்வளவு விருப்பமும், முயற்சியும் மேற்கொள்ளு கிறான் என்று தாங்கள் வினவலாம்? நான் அதற்குக்கூறும் விடை சிரவணிப்போர் செவிகுளிரவும், உளங்களிப்பவும், உற்சாகமே வோங்கவும் வரலாற்றை விளக்குவதில் தங்களுக்குச் சாமர்த்தியம் உளதாலும், தங்களது நுண்ணறிவும், நாலுணர்ச்சியும், வாக்தா ருட்டியமும், மதுரவசனங்களும், யாவரும் விரும்பும்படி யிருப்பத னாலும் அஙஙனம் என்னை முயற்சிகொள்ள தூண்டுகிற தென்பது தான். அல்லாமல் மற்றுமொரு விசேடமும் தங்களிடமிருக்கிறது. அது—'நான் கதைகள் பன்முறை பலரிடம் கேட்டிருக்கிறேன்; அநேகசித்திர விசித்திரமான கதைகளும் சிரவணித்திருக்கிறேன்; 'காஜிமஜலில்,' 'அராபிநைட்' முதலிய கதைகளும் கேட்டதுண்டு. அம்மட்டோ! 'சுகஸப்ததி' 'ஹம்ஸவிம்ஸதி' முதலான எண் ணற்ற கதைகளை எத்தனையோமுறை கேட்டிருக்கிறேன். அவைகளை சொல்லக்கூடியவர்களும் பலபேரிருக்கிறார்கள். ஆனால், ஆந்திர வீரர்களையும், அந்நாட்டு வேந்தர்களையும்பற்றிய உண்மைச்செய்தி களைக் கேட்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு எடுத்துச்சொல்லும் அதிசயமான சக்திதான்; மகானுபாவனான திக்கன்ன சோமயாஜியைப்பற்றியும், இராஜாதிராஜனும், வித்வஜன விதேயனுமான கணபதிதேவனைக் குறித்தும் தாங்கள் கூறக் கேட்டபோது மனப்பரவசத்தினால் மயிர்க்கூச்ச லுண்டாயிற்று. அவர்போல் கவிவாணர்களை ஆதரிக்கும் அரசர்கள் ஆந்திரநாட்டில்

நூற்றிலொருவரும், ஆயிரத்திலொருவரும் உதிப்பார்கள்போலும்! என்னே! அத்திக்கன்ன சோமயாஜியின் ராஜபக்தி. என்னே! அக்கணபதிதேவன் கற்றவர்பாற் கொண்டபேரன்பு. இத்தகைய சுவைமிகுந்த வரலாற்று விருந்தில் எனக்கு இதுவே முதற்கவளம் ஆனதனால், எனக்குத் தங்களை வழியனுப்ப மனந்துணியவில்லை என்று உயர்வாகப்புகழ்ந்து பாராட்டிக் கூறினன். அப்பாராட்டு மொழிகளைக்கேட்ட ராமராஜா புன்னகைபுரிந்து அவ்வீட்டெஜமானனை நோக்கி அடியில் வருமாறு கூறுகிறான்:—"ஐயா! தாங்கள்கூறிய சுவை வரலாற்றில் அமைந்திருக்கிறதேயன்றி என் வாக்கில் இல்லை. தாங்கள் என்னிடத்துக்கொண்ட அன்பின் மிகுதியால் புகழ்ந்து சொல்லுகின்றீர்கள். தகுதியற்ற என்னிடத்து நல்ல குணங்களைக் கற்பிப்பதனால் யாதுபயன்?

தாங்கள் விரும்புகிறபடி நான் நாளை தங்கிச் செல்வதற்குச் சாவகாசமில்லை. எனது தாய்மாமனுக்குத் தேகசுக மில்லாதிருப்பதனால் நான் வெகுதுரிதமாகப் பிரயாணஞ்செய்ய வேண்டியிருக்கிறது. வேண்டுமானால் இன்றிரவே தங்கள் விருப்பம் நிறைவேறும்பொருட்டு இரண்டு வரலாறுகளைக் கூறுகின்றேன். அவை மிக்க இனியதும், உயரியதும், அரியதும், அன்புமயமானதும், வியக்கத்தக்கதுமான உண்மைச் செய்திகள். அவை, "இராணி ருத்திரம்மதேவி" "இரண்டாம் பிரதாப ருத்திரதேவன்" என்ற பேரரசர்களின் பிரதாப வரலாறுகள். ஆந்திரனான நான் எனது நாட்டில் என் ஜாதியில் உயர்ந்தமாணிக்கங்கள்போல் தோன்றியவர்களும், திக்கெலாம் புகழ்கின்ற கீர்த்தியுடையவர்களும்,சர்வலோகங்களும் அறியக்கூடிய பிரசித்தர்களும், காந்தி நிறைந்தவர்களும், பொய்யுடம்பு நீத்துப் புகழுடம்பு பெற்றவர்களுமான ருத்திரம்ம தேவி—பிரதாபருத்திர பிரமுகர்களைப்பற்றிய அற்புத வரலாறுகளைக்கூறுவதில் வியப்பொன்றுமில்லை. கூறாதிருப்பதே வியப்பு! இவ்விதம்கூற ஒவ்வொருவனும் கடமைப்பட்டிருக்கிறான். எந்த மரபில் எவன் பிறந்திருக்கின்றானோ அவன் அந்த மரபின் வரலாற்றை யாவர் கவனத்துக்கும் கொண்டுவர வேண்டும். அது உத்தமமான வரலாறாய்போது புகழ்ந்துபேசவேண்டும். பழைமையான சரித்திரங்கள் பிராணனில்லாத நம்மைப் போன்றவர்களுக்கு பிராணாதாரமானது. அவை உலர்ந்துபோன எலும்புகளுக்கு

வீரரஸத்தை யுண்டாக்கும். வீரவான்களது அரியசெயல்களைச் சிந்திக்கும்போது எனது மனது பூரிக்கும். என்னையே நான் மறந்திருப்பேன். அச்சமயம் நான் வேறோர் உலகத்திலிருப்பதாக எனது ஞாபகம். இத்தகைய வரலாறுகளை எடுத்து மொழியும் வாயேவாய். கேட்கும் செவியே செவி. நமது தேசம் புத்துயி ருண்டாய்ப் புனர்விருத்தியுடன் பிரகாசிக்கச்செய்ய நமக்கு விருப்ப மிருக்குமானால், இளமையிலேயே நமது குழந்தைகட்கு முலைப் பாலுடன் தேசாபிமான சீலர்கள் வீரர்கள்—அரசர்கள் முதலி யோருடைய அரியவரலாறுகளைப் புகட்டவேண்டும். ஒப்புயர்வற்ற திப்பிய வீரர்களின் வீரவாழ்க்கைகளை யெடுத்து மொழியாத நாவும் நாவல்ல; கேட்காத செவியும் செவியல்ல என்பது எனது கருத்து. ஆனதனால் எனக்கு இவ்வரலாறுகளை விவரிப்பதில் அளவற்ற அன்புண்டு. தங்களைப் போன்றவர்கள் விருப்பமிருந்து கேட்கக்கூடுமானால் சலிக்காமற் சொல்வதற்கு எனக்கு உற்சாக மிருக்கிறது. நான் வழியிளைப்பை மறந்தேன். நித்திரையை வெறுத்தேன். கணபதிதேவன் என் நினைவில்வந்த வண்ணமாகவே யிருக்கிறான். திக்கன்ன சோமயாஜியின் இனித்த சொற்கள் எனது செவிகளில் கணீர்கணீர் என்று கேட்கின்றது. இதோ! கணபதிதேவன் தவச்செல்வி ருத்திரம்மதேவி என்னெதிரில் தாண்டவ மாடுகின்றாள். அதோ! பிரதாபருத்திரன், தங்கள் கண்களுக்குத் தோன்றாதொழியினும் என்னுடைய கண்களுக்கு வீரரஸந்தவழும் மூர்த்தி கோலத்துடன் †திரிலிங்கதேசத்தின் அதிர்ஷ்ட தேவதையைப்போல் அங்குமிங்கும் சஞ்சரிக்கின்றான். அதோ! அமைச்சன் 'யுகந்திரன்' இச்செய்திகளை உங்களுக்கெடுத் துக் கூறும்படி உரைக்கின்றான் என்று தேசாபிமானத்தால் தோய்ந்த சிந்தையில்கூறி முதலில் ருத்திரம்மதேவியின் சரித்திரத் தைக்கூறத் தொடங்கினான்:—

† திரிலிங்கமென்றால்—ஸ்ரீ சைலம், காளேஸ்வரம், பீமேஸ்வரம் என்னும் மூன்று ஸ்தலங்களில் சிவபெருமான் மல்லிகார்ச்சுனர், காலநாதர், பீமேஸ்வரர் என்னும் முப்பெயர்களால் மூன்று லிங்கங்க ளாகத்தோன்றி ஆலயங்கொண் டருள்கின்றனரென்பது. இம்மூவிடங் களையே ஆந்திரர் திரிலிங்கான மென்றும், திரிலிங்க தேசமென்றும், திரிலிங்க சாம்ராஜ்யமென்றும் கூறுகின்றனர்.

(தொடரும்.)

திருப்பத்தூர்
தாலூகாக் காங்கிரஸ் சபை.

பள்ளத்தூரில் கூட்டம்.

பள்ளத்தூர் இளைஞர் சங்கத்தில் 1930ஸு ஜூலைமீ 4உ மாலை 4-மணிக்குத் திருப்பத்தூர் தாலூகா காங்கிரஸ் கமிட்டியின் முதலாவது கூட்டம் ஷெ கமிட்டித் தலைவர் திரு. எம். சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் தலைமையில் கூடிச்செய்த தீர்மானங்களாவன :—

1. இக்கூட்டம் ஒவ்வோர் கமிட்டி அங்கத்தினரும் குறைந்த பக்ஷம் 100 சாதாரண அங்கத்தினரைச் சேர்க்கவேண்டியது எனத் தீர்மானிக்கிறது.

2. ஒவ்வோர் அங்கத்தினரும் தங்கள் தங்கள் பிரதேசங்களில் இக்கமிட்டியின் பொது நிதிக்காகக் குறைந்தது 250 ரூபாய் வசூல்செய்ய வேண்டியதாய்த் தீர்மானிக்கிறது.

3. ஒவ்வோர் அங்கத்தினரும் தங்கள் தங்கள் பிரதேசங்களில் இரண்டு கிராம சபைகளையேனும் நியமிக்க வேண்டியதாய்த் தீர்மானிக்கிறது.

4. ஒவ்வோர் அங்கத்தினரும் தங்கள் தங்கள் பிரதேசங்களில் எல்லோரையும் கதர் கட்டச்செய்ய வேண்டியதுடன் கட்குடியை ஒழிக்கவும் தீண்டாமையை விலக்கவும் முயற்சிக்க வேண்டியதாய்த் தீர்மானிக்கிறது.

5. பள்ளத்தூரில் முதலில் அன்னியத்துணி மறியலை நடத்தவும் கள்ளுக்கடை மறியலை நடத்தவும் இக்கமிட்டி தீர்மானிக்கிறது. அதற்கு பள்ளத்தூரிலேயே பாதிக்குமேல் செலவிற்குப் பணவசூல் செய்துகொள்ள வேண்டியதுடன் ஓர் மறியல் சபை நிர்மாணிப்பது சம்பந்தமான அதிகாரத்தை இக்கூட்டம் காரிய தரிசிக்கு அளிக்கிறது.

6. இக்கமிட்டி சம்பந்தமான தஸ்தாவேஜுகளையும் இருப்பையும் அங்கத்தினர் பட்டியலையும் திரு. தி. ம. நடராஜன் அவர்கள் ஒரு வாரத்திற்குள் காரியதரிசி வசம் ஒப்புவித்துவிட வேண்டியதாய்த் தீர்மானிக்கிறது.

நிர்வாக விதிகள்.

கீழ்க்கண்ட நிர்வாக விதிகள் அங்கீகரிக்கப்பட்டன.

1. இக்கமிட்டி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியும் தமிழ் மாகாண கமிட்டியும் காரைக்குடி ஜில்லா கமிட்டியும் செய்துள்ள விதிகளை ஒப்புக்கொண்டு அதை அனுசரித்து நடந்துவர வேண்டியது.

2. (அ) இக்கமிட்டி அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் வருடம் ஒன்றுக்கு ரூபாய் மூன்று தாலுக்காக் கமிட்டிச் சந்தாவாகச் செலுத்த வேண்டியது.

(ஆ) இக்கமிட்டியின் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் கூட்டத்திலிருந்து மறுகூட்டத்திற்குள் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ள வேண்டியது. தவறினால், அங்கத்தினர் ஜாப்தாவிலிருந்து அவர்கள் நீக்கப்பட்டு கமிட்டியாரின் ஏகமனதான அபிப்பிராயத்திற்கிணங்க புதிய அங்கத்தினர் ஒருவரைத்தேர்ந்தெடுத்து அந்த ஸ்தானத்தை பூர்த்திசெய்துகொள்ள வேண்டியது.

3. இக்கமிட்டிக் கூட்டத்திற்குக் கோரம் ஏழு அங்கத்தினராக இருக்க வேண்டியது.

4. இக்கமிட்டியின் அங்கத்தினர்கள் தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு ஆஜராகாதுபோயின் அவர்களும் அங்கத்தினர் பதவியை இழந்தவர்களாவார்கள். அவர்கள் விஷயத்திலும் கமிட்டியார் உசிதப்படி ஏகமனதாகப் புதிய அங்கத்தினரை நியமித்துக்கொள்ளவோ மீண்டும் அவர்களையே நியமித்துக்கொள்ளவோ செய்யவேண்டியது.

5. இக்கமிட்டி அங்கத்தினர்கள் யாவரும் காங்கிரஸின் ஆணைக்கிணங்க எல்லாக்கொள்கைகளையும் ஆதரித்து அதன்படியே

நடந்துவர வேண்டியது; அதில் முக்கியமாகத் தாங்களும் தங்கள் குடும்பத்தினர்களும் கதரையே உடுத்த வேண்டியது.

6. இக்கமிட்டியின் எல்லாக் கணக்குகளையும் ஒழுங்கு முறையுடன் காரியதரிசி தயார்செய்து அந்தந்த மாதக்கூட்டத்தில் ஆஜர்செய்ய வேண்டியது.

7. கமிட்டியின் கூட்டத்தைக் காரியதரிசி தலைவரின் சம்மதத்தின்பேரில் ஒவ்வோர்மாதமும் கூட்டவேண்டியதுடன் கமிட்டி அங்கத்தினர் ஐந்துபேர் வேண்டிக்கொண்டாலோ அவசியம், அவசரம் என்று தலைவர் கருதினாலோ விசேஷக் கூட்டங்களையும் காரியதரிசி கூட்டவேண்டியது.

8. ஒவ்வோர் மாதாந்தரக் கூட்டத்தையும் கூடுமானவரை வேறு வேறு இடங்களிலேயே கூட்டவேண்டியது.

9. ஒவ்வோர் அங்கத்தினருக்கும் ஒவ்வோர் கூட்டத்திற்கும் அழைப்பு எழு நாளைக்கு முன்னரேயே அனுப்பிவிட வேண்டியது.

10. இக்கமிட்டியின்கீழ் பலகிராமக் கமிட்டிகளை நியமிக்க வேண்டியது.

11. அவர்கள் மூலம் தங்களுக்கு வேண்டிய பணத்தை வசூல் செய்யவும் அங்கத்தினர்களை அதிகப்படுத்தவும் இதர நிர்மாண வேலைகள்செய்யவும் காரியதரிசி தனித்தோ, கூடுமானால் இக்கமிட்டியின் இரண்டோர் அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொண்டோ ஏற்பாடு செய்யவேண்டியது.

12. அது சம்பந்தமான செலவுகளை இக்கமிட்டியின் நிதியி லிருந்தே செய்யவேண்டியது.

13. காரியதரிசி செலவிடும் ஒவ்வோர் இனமும் தலைவரின் சம்மதிபெற்றே செய்யவேண்டியது.

14. அவசரச் செலவுகளின் நிமித்தம் இக்கமிட்டியின் பொக்கிஷத்திலிருந்து ரூபாய் இருநூறுவரை காரியதரிசி கையிருப் பாக வைத்துக்கொண்டு அதற்குமேல் சேருந்தொகை பூராவையும் பொக்கிஷதார்வசம் ஒப்புவித்து ரசீதுபெற்றுக் காரியதரிசி தஸ்தவேஜுகளுடன் வைத்துக்கொள்ள வேண்டியது.

15. ஒவ்வோர் ஆண்டும் இக்கமிட்டி தங்கள் ஆண்டுச் செலவிற்காக பொதுநிதியாக ரூபாய் பதினாயிரம்வரை வசூல்செய்து கொள்ளவேண்டியது.

மறியல் முறை.

"மறியல் எல்லாவிடங்களிலும் அமைதியாக நடைபெறவில்லை யென்பதாக மாகாண அரசாங்கங்களிடமிருந்து இந்திய அரசாங்கத்துக்குப் புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன வென்பதைக் காங்கிரஸ் வாதிகள் அறியவேண்டும். இந்தப் புகார்கள் எவ்வளவுதூரம் நியாயமானவையென்று எனக்குத்தெரியாது. ஆனால் நம்மைப் பொறுத்த வரையில் அணுவளவும் குறைசொல்ல இடமின்றி ராஜி நிபந்தனைகளை நடத்திவைத்தல் மிகவும் அவசியமாகும். அதிகாரிகள் எப்படி நடந்துகொண்டாலும் நமது கடமையை நாம் செய்யவேண்டும். இவ்விஷயத்தில் எவ்வளவு கண்டிப்பாய் நடந்துகொள்கிறோமோ அவ்வளவுக்குக் காங்கிரஸின் பலமும், நன்மதிப்பும் அதிகமாகும். ஆதலின் ஏற்கனவே கூறியுள்ள மறியல் முறைகளை இங்கே மறுபடியும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

1. மறியலில் பலாத்காரத்தின் வாசனைகூட இருக்கக்கூடாது.

2. கடைக்கு வருவோர் தொண்டர்களின் கூட்டத்தைக்கண்டு பயந்து திரும்பினார்கள் என்றுசொல்ல இடமிருக்கக்கூடாது. ஆகையால், ஓரிடத்தில் ஒரேசமயத்தில் ஐந்து தொண்டர்களுக்குமேல் நிற்க வேண்டாம்.

3. கடைக்கு வருபவர்களைத் திரும்பிப்போகும்படி மரியாதையாக வேண்டிக்கொள்ளலாம். துண்டுப் பிரசுரங்கள் கொடுக்கலாம். இதற்குமேல் எவ்வித பலவந்தமும் உதவாது.

4. விதேசி ஜவுளிக்கடைக்காரர்கள் வாக்குறுதியை மீறிநடந்தால் அதற்காகக் காங்கிரஸ் கமிட்டிகள் அவர்களுக்கு அபராதம் விதிப்பது கூடாது.

5. விதேசித்துணி வாங்குவோரை அவமானப்படுத்துவதற்காக சத்தம் போடக்கூடாது.

6. துணிவாங்க வருபவர்களைச் சுற்றிவளைந்து நின்றுகொண்டு அவர்கள் கடைக்குள் நுழையாமல் தடுக்கக்கூடாது.

7. வழியில் குறுக்கே படுத்துக்கொண்டு கடைக்கு வருபவர்களை தடுத்து நிறுத்துவதும், விதேசித்துணி ஏற்றிய வண்டிகள் போகமுடியாதபடி குறுக்கே படுப்பதும்கூடாது.

இத்தகைய கட்டுப்பாடுகளுக்குட்பட்டு மறியல்செய்வது பயனளியாது என்று யாரேனும்நினைத்தால் அவர்கள்மறியலை நிறுத்திவிடுவதே நலமாகும். விதேசித்துணி விற்பனையைத்தடுக்க ராஜி ஒப்பந்தத்தை மீறியே யாகவேண்டுமென்றால், அதைவிட விதேசித்துணி விற்றாலும் விற்கட்டும் என்றிருப்பதேமேல்.

காங்கிரஸின் செல்வாக்கு பொது ஜனங்களிடையே வேரூன்றி, அவர்கள் கதர் இயக்கத்தின் தத்துவத்தை நன்குணரும்போதுதான் விதேசித்துணி பகிஷ்காரம் பூரணமாய் வெற்றியடையும். இவ்வெற்றியடைவதற்குரிய உண்மையான வேலைகள் கதர்ப் பிரசாரமும், கதர் உற்பத்தியுமேயாகும். இவைகளைக் கிராமங்களில்தான் செய்யமுடியும்.

நாட்டின் பொருளபிவிருத்தியையும், சமூக முன்னேற்றத்தையும் நோக்கமாகக்கொண்டே விதேசித்துணி பகிஷ்காரம் நடத்துகிறோம் என்பது ஞாபகம் இருக்கவேண்டும். ஆதலின் பிரிட்டிஷ் துணியையும் நூலையும் பகிஷ்கரித்தல் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு ஜப்பான், இதாலி தேசங்களின் துணியையும், நூலையும் பகிஷ்கரித்தல் அவசியமாகும். உண்மையில் ஜப்பான்துணி பகிஷ்காரம் அதிக அவசியமென்றும் சொல்லலாம். ஏனெனில், பிரிட்டிஷ் துணியைவிட ஜப்பான் துணியே கதருக்கும், சுதேசி ஆலைத்துணிக்கும் பெரிய போட்டியாயிருக்கிறது. ஜப்பான் தேசத்தாரிடம் நமக்கு எவ்வித விரோதமும் கிடையாது. நமது நாட்டின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாததாகையால்தான், விதேசித்துணி பகிஷ்காரத்தை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

விதேசித்துணி மறியல் முறையைக்குறித்து மேலே சொல்லியிருப்பதெல்லாம் மதுபானக்கடை மறியலுக்கும் பொருந்தும். மதுபான மறியல் முடிவில் வெற்றியடைவதும் குடிகாரர்களின் வீடுகளுக்குச்சென்று போதனை செய்வதையே பொறுத்ததாகும்.”

(மஹாத்மா) மோ. க. காந்தி.

II

மறியலை நடத்தும் பொறுப்பு வகிப்போர் ஒவ்வொருவரும் மேற்கண்ட மகாத்மாவின் புத்திமதிகளில் ஒவ்வொரு வார்த்தையையும் நன்கு ஆராய்ந்து மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

மறியல் ஆரம்பித்த புதிதில் ஒருவகைப் புதுமையும் கிளர்ச்சியும் இருக்கும். தொண்டர்கள் உற்சாகமாயிருப்பார்கள். ஆனால் கொஞ்ச நாளைக்கெல்லாம் சாத்வீக மறியலினால் எதிர்பார்த்தபடி பூர்ணவெற்றி கிடைப்பதில்லையென்று காணப்படும். தொண்டர்கள் எவ்வளவுதான் வேண்டிக்கொண்டாலும் சிற்சிலர் ஏதேனும் ஒரு காரணத்தைக்கொண்டு கடைகளுக்குவந்து கொண்டிருப்பார்கள். இதைக்கண்டு நாம் மனம் சோர்ந்துவிடக்கூடாது. சீமைத்துணி வாங்குவோரின் வீடுகளுக்கும், குடிகாரர்களின் வீடுகளுக்கும்சென்று வேண்டிக்கொண்டு அவர்களுடைய மனதை மாற்றுவதின் மூலமாகவே உண்மையான நிலையான வெற்றி நாம் அடையமுடியும். இதுதான் நமது முக்கிய வேலைத்திட்டம். மறியல் இதற்குத் துணைத் திட்டமேயாகும்.

ஆதலின், ஒரு பக்கம் மறியல் நடக்கையில் மற்றொரு பக்கம் தீவிரமாகப் பிரசாரவேலை நடத்திவரும்படி எல்லாக் காங்கிரஸ் கமிட்டிகளையும் வேண்டிக் கொள்ளுகிறேன். கிராமம் கிராமமாகவும், வீடு வீடாகவும்சென்று பிரசாரம் செய்யவேண்டும். மத்திய ஸ்தலங்களில் பெரிய கூட்டங்கள் நடத்துவதோடு, ஜனங்களின் வாசஸ்தலங்களுக்கருகில் வீதிமுனைகளில் சிறுகூட்டங்கள் போடுவது மிகவும் முக்கியமாகும். மூலை முடுக்குகளுக்கெல்லாம் நமது பிரசாரம்போய் எட்ட வேண்டும். இந்த வேலை நன்கு நடந்துவந்தால்தான் மறியலைத் திறம்பட நடத்துவதற்கு அவசியமான உற்சாகம் இருந்துவரும். பிரசாரம் இல்லாவிடில் மறியல் விரைவில் உற்சாகம் குறைந்து பலங்குன்றிப் போகும்.

பூரண வெற்றியை எதிர்பார்ப்பதோ, தோல்வியைக்கண்டு சோர்வுறுவதோ கூடாதென்று மீண்டும் ஒருமுறை தெரிவித்துக்கொள்ளுகிறேன். மறியல் பூரணமாய் வெற்றி யடையவில்லை யென்றால், அதாவது மறியல் செய்கிறபோதும் ஒரு சிலர் கடைக்குள் நுழைந்தார்களென்றால், அதுவே நமது மறியல் சாத்வீகமாய் நடைபெறுகிறதென்பதற்கு அத்தாட்சியாகும். மற்றும் நாம் அசிரத்தைக்கொண்டு தூங்கிவிடாமல், மேலும்மேலும் ஊக்கங்கொண்டு உழைத்து விதேசித்துணி, மதுபானத் தீமைகளை அடியோடு ஒழிக்க முயல்வதற்கும் அதுவே தூண்டுகோலாயிருக்கும்.

காந்தி ஆசிரமம்,
5—7—1931

ச. இராஜகோபாலாச்சாரியார்,
அக்கிராசனர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

செய்தித் திரட்டு.

பள்ளத்தூர்.

காலநிலை :—மழை பெய்துள்ளது.

உற்சவம் :—மிகச்சிறப்பாக நடைபெற்றது.

பொதுக்கூட்டம் 4—7—31ல் மாலை சந்தைப்பேட்டையில் தாலூகாக் காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஓர் பொதுக்கூட்டம் திரு. M. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றது. தேசியத்தைப்பற்றி ஆத்தங்குடி திரு. ஜகதீஸ்வரய்யரவர்களும் சிறுவயல் திரு. ப. சிவானந்தன் அவர்களும் சொற்பெருக்கிட்டார்கள்.

தீப்பற்றியது :—இம்மாத மத்தியில் நமது 'நவமணி' ஆசிரியர் வீட்டிலிருந்த விளக்கெண்ணை விளக்கின் திரியை எலி இழுத்துக் கொண்டுபோய் அவரது உடுப்புப்பெட்டியில் வைத்துவிடவே அதிலிருந்து அவரின் வீட்டின் தெற்கு அறையில் நெருப்புப்பற்றி உள்ளேயே எறிந்துக்கொண்டிருப்பதை அறிந்த வீட்டாரின் கூக்குரலின் பேரில் நூற்றுக்கணக்கான அயலார் அங்குவந்து உடனே நெறுப்பை அணைத்துவிட்டார்கள். சுமார் 500 ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் பாழாய்விட்டதாகத் தெரிகிறது.

மஹாத்மாஜீ லண்டன் பயணம்.

மஹாத்மாஜீ ஆகஸ்ட் 15ல் இரண்டாவது வட்டமேஜை மஹாநாட்டையொட்டி லண்டன் பிரயாணமாகலாமென நிச்சயமாகத் தெரிகிறது.

கள்ளுக்கடை மறியல்.

அமராவதி புதூரில் இம்மாத மத்தியிலிருந்து கள்ளுக்கடை மறியல் திரு. பொ. திருகூடசுந்தரமவர்கள் தலைமையில் துவக்கப்பட்டு ஒழுங்காக நடைபெற்று வருகிறது.

சார்ஜ் செய்யப்பட்டனர்.

காரைக்குடியில் மறியல்செய்த தொண்டர்கள் மூவரைப் போலீஸ் ஸ்டேஷன் நியூசென்ஸ் ஆக்டின்படி சார்ஜ்செய்து போலீஸ் ஸ்டேஷன் கொண்டுபோகவே 'நவமணி' ஆசிரியர் சி. ராம. இராமனுத முதலியார் அவர்களும் 'ஊழியன்' உதவி ஆசிரியர் திரு. நடராஜன் அவர்களும் ஜாமீன்கொடுத்து மீட்டுவந்து மீண்டும் அமைதியாக அத்தொண்டர்கள் மறியல் செய்கிறார்கள். 14—7—31ல் அது சம்மந்தமான வாயிதா நாளாகும்.

பர்மாக்கலகம்.

இன்னும் ஓய்ந்தபாடில்லை. மேலும் மேலும் கலக நிகழ்ச்சிகள் அதிகமாக நிகழ்ந்துகொண்டே வருகின்றன. அங்கிருந்துவரும் ஒவ்வோர் கப்பலிலும் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

Regd. No. M. 2646.

தாதுபுஷ்டிக்கி சரப லேகியம்.

இது மகா அருமையான மூலிகைகளாலும் விலையுயர்ந்த வித்துமுதலிய சரக்குகளாலும் தயார்செய்யப்பட்ட பெரிய முறை லேகியம். இதுவரை ஒருவராலும் செய்துமுடிக் காதது. இரத்தக் குறைவால் ஏற்படும் சகல கொடிய வியாதி களையும் நிவர்த்திக்க வல்லமையுடையது. தாதுபுஷ்டிக்கி நிகறற்றது. அபார மகிமை பொருந்தியது. பலத்தில் சிறந்த மருந்து இதைவிட வேறொன்றில்லை யென்பது உறுதி பலத் தில் யானைதான் முதன்மையுடையது என்பது உலகமறிந்த விஷயம். அப்பேர்பட்ட யானையை வெல்லக்கூடியது. சிங் கம். சிங்கத்தையும் வெல்வது சரபம். ஆயின், சரபலேகியத் தை ஜெயிப்பதற்கு இப்புவியில் எதுவுமே இல்லை என்பது உறுதி. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்.

ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய லேகியம்	ரூ. 5--0-0
½ மண்டலம் உபயோகிக்கக்கூடிய லேகியம்	ரூ. 2-12-0

அயல்நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

வி. பி. வேறு.

P. S. ராமய்யா

பழனி பங்கஜம் மெடிகல்ஹால் பழனி. S. I.

நீங்கள் எலக்டிரிக் வயரிங் செய்ய விரும்புகிறீர்களா?

அப்படியானால் எங்களிடம் ஓர் முறை ஆர்டர் கொடுத்துப் பாருங்கள். குறைந்த கூலியில் உயர்ந்தமுறையில் வேலை செய்து தருவோம். எல்லாவகையான எலக்டிரிக் சாமான்களும் சப்ளை செய்யப்படும்.

T. R. ரெங்கசாமி

பள்ளத்தூர்.

Printed & Published by S. RM. RamanathaMudaliar,
at Vedhambal Press, Pallatur. (Ramnad Dt.)